விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 279 வள்ளுவர் ஆண்டு 2056 புரட்டாதி 08 புதன்கிழமை (24.09.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

NORTHERN UNI
EXPERIMENT EXPERIENCE EXCEL
2025 ஆம் ஆண்டுக்கான பட்டப் படிப்புக்கள் ஆரம்பம்
BSc (Hons) in IT | BBA (Hons)
(C-3946) OCTOBER INTAKE 2025 அனுமதிகளுக்கு அழைக்கவும்!
SLIIT NORTHERN UNI, 239 Arasadi Road, Kantharmadam Junction, Jaffna
021 7534 807

# தமிழரின் பிரச்சினைகளுக்கு தீர்வு கிடைக்கவில்லை

## இந்திய உயர்ஸ்தானிகரிடம் தமிழ் அரசுக் கட்சி எம்.பிக்கள்



(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு இன்னும் எவ்விதத் தீர்வும் கிடைக்கவில்லை என இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். (16ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ் மக்களுக்கு விரைந்து நீதியைப் பெற்றுத் தாருங்கள்

## தமிழ் மக்களின் கையொப்பங்கள் ஐ.நா பிரதிநிதியிடம் கையளிப்பு



(கொழும்பு)

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு 15ஆம் பக்கம் பார்க்க

# திலீபனுக்கு சிலை வைக்க இடம் ஒதுக்குங்கள்

## வவுனியா மாநகர முதல்வரிடம் கோரிக்கைக் கடிதம்

(வவுனியா)

தியாக தீபம் திலீபனுக்கு வவுனியாவில் சிலை வைப்பதற்கு 15ஆம் பக்கம் பார்க்க

# மின் அழுத்தி மூலம் மின்சாரம் பாய்ந்ததில் இளைஞன் உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

மின்னழுத்தி மூலம் மின்சாரம் பாய்ந்ததில் இளைஞன் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

சுன்னாகம் உடுவில் 15ஆம் பக்கம் பார்க்க

# யாழ்.போதனாவில் பிரசவிக்கப்பட்ட இரட்டை சிசுக்கள் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சத்திர சிகிச்சை மூலம் பிரசவிக்கப்பட்ட இரட்டையர்களான ஆண் மற்றும் பெண் சிசுக்கள் உயிரிழந்துள்ளன. 02ஆம் பக்கம் பார்க்க

# இனப் பிரச்சினை தொடர்பில் நேரில் பேச நேரம் ஒதுக்குங்கள்

## இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜனாதிபதி அநுரவுக்கு கடிதம்

(கொழும்பு)

தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினை குறித்து நேரடியாகப் பேசுவதற்கு நேரம் ஒதுக்கித் தாருங்கள் என்று கோரி ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானமும் பொதுச்செயலாளர் எம்.ஏ.சுமந்திரனும் ஒப்பமிட்டு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்திருக்கின்றார்கள். (04ஆம் பக்கம் பார்க்க)

# யாழில் பல வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடையவர்

## கட்டுநாயக்கவில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பல்வேறு வாள்வெட்டு சம்பவங்களுடன் தொடர்புபட்டு பொலிஸாரால் நீண்டகாலமாகத் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் நேற்று கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட் 15ஆம் பக்கம் பார்க்க

# பாதுகாப்புப் படையினர் வசமுள்ள காணிகள் விடுவிப்பு எப்போது?

## வடக்கு ஆளுநரிடம் கேட்டறிந்த அமெரிக்கப் பிரதிநிதி



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையினர் வசமுள்ள காணிகள் விடுவிப்பது எப்போது என வடக்கு மாகாண 15ஆம் பக்கம் பார்க்க

# மின்சார நெருக்கடி நாட்டில் ஏற்படாது?

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



(கொழும்பு)

நாட்டில் மின்சார நெருக்கடி ஏற்படமாட்டாது என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று 04ஆம் பக்கம் பார்க்க

# ஜனாதிபதியை படுகொலை செய்யத் திட்டம்?

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை படுகொலை செய்வதற்கான திட்டம் நடந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. 04ஆம் பக்கம் பார்க்க

# தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரி

## சுழற்சி முறையில் உணவு தவிர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நீதி கோரி எதிர்வரும் 25ஆம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை சுழற்சி 02ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

25 ஆம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 21 - 11 - 1937

மறைவு 30 - 09 - 2000

அரியாலையில் பிறந்து அல்வாயில் வசித்த

## அமரர் பொன்னையா குகதாசன்

(பிரபல கட்டடக் கலைஞர்)

திதி : வளர்பிறை திருதியை
24.09.2025

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்தினுள் வைக்கப்படும்
அன்பின் உறைவிடமான கேமாலயத்தினை
விட்டுப் பிரிந்து 25 ஆண்டுகள் கடந்து விட்டதே.
நம்ப மறுக்கிறது அப்பாவே!
பாசமான மனைவி வேணியினையும்
அளவுகடந்த அன்பான பிள்ளைகளையும்
போற்றுதற்குரிய நல் மருமக்களையும்
பாசத்துக்காக ஏங்கித் தவிக்கும் பேரப்பிள்ளைகளையும்
என்றுமே மறக்காத நல் உறவுகளையும்
ஆலடியான் வாசலில் அனுதினமும்
தொண்டாற்றினீரே அப்பாவே!
என்றென்றும் எமக்காக வானில் இருந்து
பூமாரி சொரிந்து ஆசி வழங்குவீர்கள் அப்பாவே!
ஏற்றத்துடனும் ஊக்கத்துடனும் உண்மையுடனும்
எப்போதும் உம் வழியில் எம் பணி தொடரும்.

கேமாலயம்,
அல்வாய் மனோகரா (1581)

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள்

# மரண அறிவித்தல்

## திருமதி குணபாலன் இந்திராதேவி

(சின்ன ரீச்சர்)



தோற்றம் 13.09.1949 மறைவு 23.09.2025

கைதடி நாவற்குழியைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு நந்தாவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணபாலன் இந்திராதேவி அவர்கள் நேற்று (23.09.2025) செவ்வாய்க்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா - சிவசோதி தம்பதிகளின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - நாமாக்கா (சிங்கப்பூர் - நாமாக்கா) தம்பதிகளின் அன்பு மருமகளும் இராச மணி, காலஞ்சென்ற இராமச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் கணபதிப்பிள்ளை, குணபாலன் (பேபி) அவர்களின் பாசமிகு துணைவியாரும் சர்மினி (பபி) அவர்களின் அன்புத் தாயாரும் கணேஸ்வரன், சதீஸ் (PHI - Tutar) அவர்களின் அன்பு மாமியாரும் சந்திரன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற சற்குணம் (பொறியியலாளர் - UK), சறோஜினி (அவுஸ்திரேலியா), உத்தமகுணம் (பொறியியலாளர் - UK), நற்குணம் (பொறியியலாளர் - UK) ஆகியோரின் பாசமிகு அண்ணியாரும் நிர்மலா (அவுஸ்திரேலியா), காலஞ்சென்ற ஜராங்கனி (UK), பத்மநாதன் (அவுஸ்திரேலியா), பிரேமினி (UK), மலர் (UK) ஆகியோரின் அன்பு மைத்துனியும் இராஜேந்திரமணி - ஞானேஸ்வரன் (யாழ்.பல்கலைக்கழகம்), ருஷ்யேந்திரமணி - சங்கரப்பிள்ளை (ஆசிரியர் - ஆவரங்கால் நடராஜா இராமலிங்கம் பாடசாலை), ருபேந்திரமணி - பாலமுகுந்தன் (UK), ஆகியோரின் அன்புச் சின்னம்மாவும் கௌரி குடும்பம் (டென்மார்க்), இரவீந்திரன் குடும்பம் (பாபு-டென்மார்க்), சந்திரகுமார் குடும்பம் (UK), சிவகுமார் குடும்பம் (கனடா), ஸ்ரீப்பிரியா குடும்பம் (UK), ஆகியோரின் அன்புச் சின்னமாமியும் சங்கீர்த்தா (JSAC- நிதி உத்தியோகத்தர்), சதுர்ஷிகா (Lecturer - ICBT), சம்யுக்தா (யா/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை), அபராஜிதன், கார்த்திகா (அமெரிக்கா), பவதாரணி (யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி), மயூரஹரிஷ் (UK) ஆகியோரின் அன்பு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் ஈமச்சடங்குகள் இன்று (24.09.2025) புதன்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் ஆரம்பமாகி, பூதவுடல் பிற்பகல் 02.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

077 261 8267, 071 682 0667
077 907 5753 (5497)

தகவல்:
குடும்பத்தினர்

## தமிழர்களுக்கு...

முறையான உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடர்ச்சியாக முன்னெடுக்க வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் சங்கத்தின் பிரதிநிதிகள் தீர்மானித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த போதே அவர்கள் இதனைத் தெரிவித்தனர்.

இது குறித்து வடக்கு கிழக்கு காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு நீதி கோரும் சங்கத்தின் செயலாளரும் குறித்த அமைப்பின் வவுனியா மாவட்டத்தின் தலைவியுமான சிவானந்தன் ஜெனிதா தெரிவிக்கையில்,

குறித்த போராட்டத்தை செம்மணி வளைவுப் பகுதியில் செய்யவிருக்கிறோம். அனைத்து மாவட்டங்களிலும் உள்ள எமது உறவுகள் அங்கு வருகை தந்து ஒன்றிணைய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்.

வியாழக்கிழமை காலை 9 மணி முதல் போராட்டம் செம்மணி வளைவுப் பகுதியில் ஆரம்பமாகி இரவு பகலாகத் தொடர்ச்சியாக 29ம் திகதி மாலை 4 மணிவரை நடைபெறும்.

தமிழ் மக்கள் அனைவரும் இதனை ஒரு பொது அழைப்பாகக்கருதி அனைவரும் பங்கேற்று போராட்டத்தை வலுப்படுத்த வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் அறுபதாவது கூட்டத்தொடரில் 22 தொகுதி தொடக்கம் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான கூட்டம் நடைபெற்று வருகிறது.

அந்த மாநாட்டில் எமக்காக எமது உறவுகளுக்காக நிரந்தரத் தீர்வு கிடைக்க வேண்டும். இதுவரை காலமும் நடைபெற்ற இனப்படுகொலைகளுக்கு நீதி வழங்கப்பட வேண்டும்.

மனிதாபிமானத்தை பேணுகின்ற மனித உரிமை பேரவையிலே எமக்கான நீதியினை வழங்குவதற்கு அனைத்து நாடுகளும் புவியியல் அரசியலைத் தவிர்த்து முன்வர வேண்டும். ஏனைய நாடுகள் மற்றும் அனுசரணை வழங்கும் நாடுகளிடமும் நாம் கோரிக்கையை விடுக்கிறோம்.

தமிழ் மக்களுக்கு நிகழ்ந்தது இனப்படுகொலை என்பதை நாம் இங்கே ஈழத்தில் வாழும் தமிழர்களாகத் தெரிவித்துக் கொள்கிறோம். எமக்கு இழைக்கப்பட்ட அநீதிக்குச் சர்வதேச நீதி வழங்கப்பட வேண்டும் என்பதற்காகக் குறித்த போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளோம் என்றனர். (ம-7,33,104)

## பிரசவிக்கப்பட்ட...

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த நிர்மலராஜ் சாருமதி என்பவர் கர்ப்பம் தரித்திருந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (21) வலிப்பு ஏற்பட்டதைத் தொடர்ந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

தொடர்ந்து அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தைகளைப் பிரசவிக்க முற்பட்டபோது பெண் சிசு இறந்து பிறந்துள்ளது.

ஆண் சிசு கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்ட நிலையிலும் 45 நிமிடத்தில் உயிரிழந்துள்ளது.

இம்மரணம் தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை(23) யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார்.(ம-7,60,104)

## வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் - நீர்வேலி

### கிளை முகாமையாளர் (பயிற்சியாளர்)

மேற்குறித்த பதவிக்கு ஆண்/பெண் இருபாலரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பதவி: கிளைமுகாமையாளர் (பயிற்சியாளர்)
02. கல்வித் தகைமை: க.பொ.த(சாதாரணம்) கணிதம், தமிழ்மொழி உள்ளடங்கலாக ஆறு பாடங்கள் சித்தி (இரு அமர்வுகளுக்கு மேற்படாது)
03. மேலதிகத் தகைமை: கணணி அறிவும், சம்பந்தப்பட்ட துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை
04. விண்ணப்ப முடிவுத் திகதி: 08.10.2025
05. விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி: "பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி"
06. குறிப்பு:
    - ❖விண்ணப்ப படிவத்தை தலைமை கந்தோரில் ரூபா.20/- செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
    - ❖விண்ணப்பத்துடன் தகைமை சான்றிதழ் பிரதி இணைக்கப்பட வேண்டும்.
    - ❖பதவியை பொறுப்பேற்கும் போது சங்கத்தினால் கோரப்படும் ரொக்கப் பிணை, ஆதனப்பிணை செலுத்தப்பட வேண்டும்.

நீர்வேலி (5494) பொது முகாமையாளர்

## வலி கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம் - நீர்வேலி

### கூறுவிலை கோரல்

வலி கிழக்கு தென்பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் உரும்பிராய் கிராமியவங்கி திருத்தம் செய்வதற்கான கூலி, மூலப்பொருட்களிற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. கூறுவிலைப் படிவங்களை சங்க தலைமையகத்தில் பெற்று பூரணப்படுத்தி **"பொது முகாமையாளர், வலி கிழக்கு தென்பகுதி பல நோக்கு கூட்டுறவுச் சங்கம், நீர்வேலி"** எனும் முகவரிக்கு தபால் மூலமோ அன்றேல் நேரிலோ அனுப்பி வைக்கவும்.

விண்ணப்ப முடிவு திகதி : 08.10.2025 நண்பகல் 12.00 மணி
விண்ணப்பப்படிவ கட்டணம் : ரூபா.1000.00
மீளளிக்கக்கூடிய வைப்புப்பணம் : ரூபா.10000.00

நீர்வேலி (5495) பொது முகாமையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி மகளிர் சிகிச்சை நிலையத்தை மீள இயக்க நடவடிக்கை- சுகாதார அமைச்சர்



(கொழும்பு)

**பல வருடங்களாக இயங்காமல் இருக்கும் கிளிநொச்சி மகளிர் சிகிச்சை நிலையத்தை மீள இயங்கச் செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாகவும், அதற்குரிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளதாவும் சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வில் வாய்மூல விடைக்கான கேள்வி வேளையின் போது ஆளும் கட்சி உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திர மூர்த்தியால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பாராளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திர மூர்த்தி கேள்வியெழுப்புகையில்,

கிளிநொச்சி மாவட்டத்தில் நெதர்லாந்து அரசாங்கத்தால் கட்டப்பட்ட சிறப்பு மகளிர் சிகிச்சை நிலையமானது பல ஆண்டுகளாக இயங்காமல் இருக்கின்றது.

இதனை நாங்கள் சென்று பார்த்தோம். அங்கே இலங்கையில் எங்கும் இல்லாத ஸ்கேன் மற்றும் கதிரியக்க இயந்திரங்கள் உள்ள போதும். அவற்றில் சில உபகரணங்கள் காலாவதியாகியுள்ளன.

சுகாதார அமைச்சுசார் ஆலோசனை கூட்டத்தில் இவ்விடயம் கலந்துரையாடப்பட்டது. அதன்போது வடமாகாணத்தில் சுழற்சி முறையில் ஆளணிகளை ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் கூறப்பட்டது.

சுகாதார அமைச்சர் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் அவதானம் செலுத்தி நீண்ட காலமாக இயங்காமல் இருக்கும் வைத்தியசாலைகளை உடனடியாக இயக்கவும், ஆளணிகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதன்மூலம் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்ட கர்ப்பிணிகள் உள்ளிட்ட பெண்கள் சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முடியும் என தெரிவித்தார்

இதற்கு பதிலளித்த சுகாதார அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ,

இந்த பிரச்சினை உண்மையானதே. அங்கே கட்டடங்கள், உபகரணங்கள் இருந்தாலும் ஆளணி போதுமானதாக இல்லை.

இலங்கைக்கு வரும் விசேட வைத்தியர்களை அங்கு அனுப்பினாலும் அவர்கள் இலங்கையில் தொடர்ந்தும் தங்கியிருப்பது தொடர்பிலும் பிரச்சினைகள் உள்ளன.

எவ்வாறாயினும் நிறைவுகாண் ஊழியர்களை நாங்கள் பயிற்றுவித்து வருகின்றோம். இதனூடாக அங்கு ஆளணியை பூர்த்தி செய்ய முடியுமென்று நினைக்கின்றேன்.

கிளிநொச்சி பெரிய வைத்தியசாலை தொடர்பிலும் நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம். அங்குள்ள குறைபாடுகளை தீர்க்க நடவடிக்கை எடுப்போம் என்றார். (நி)

# மின்சார சபை ஊழியர்களின் அனைத்து விடுமுறைகளும் இரத்து

(கொழும்பு)

மின்சார சபையின் அனைத்து ஊழியர்களின் விடுமுறைகளும் உடன் அமுலாகும் வகையில் மறு அறிவிப்பு வரை உடனடியாக இரத்து செய்யப் பட்டுள்ளதாக பொது முகாமையாளர் எழுத்துபூர்வமாக தெரிவித்துள்ளார்.

மின்சார விநியோகம் தொடர்பான அனைத்து சேவைகளையும் அத்தியாவசிய சேவைகளாக அறிவித்து, ஜனாதிபதியால் 21 ஆம் திகதி விசேட வர்த்தமானி அறிவிப்பு வெளியிடப்பட்டது.

1979 ஆம் ஆண்டு 61 ஆம் இலக்க அத்தியாவசிய பொது சேவைகள் சட்டத்தின் 2 ஆம் உறுப்புரிமையின் கீழ் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி அதிவிசேட வர்த்தமானி ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவினால் கையெழுத்திடப்பட்டு வெளியிடப்பட்டது.

சாதாரண பொது வாழ்க்கையைப் பேணுவதற்கு அவசியம் என்பதையும், அந்த சேவைகளுக்கு இடையூறு அல்லது தடை ஏற்படக்கூடும் என்பதை கருத்தில் கொண்டு இந்த வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கை, மின்சார சபைத் தொழிற்சங்கங்கள் முன்னெடுத்து வரும் பணிப்புறக்கணிப்புப் போராட்டங்களுக்கு பதிலடியாகப் பார்க்கப்படுகிறது. (நி)

# ஏற்றுமதி வருமானத்தை 18 பில்லியன் டொலர்களாக அதிகரிக்க அரசாங்கம் திட்டம்

(கொழும்பு)

இந்த ஆண்டு ஏற்றுமதி வருமானத்தை, 18 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதே அரசாங்கத்தின் நோக்கம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஏற்றுமதி கடன் காப்பீட்டுக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் பேராசிரியர் அருணாசாந்த ஆராச்சி இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்தியா, சீனா உள்ளிட்ட நாடுகளுடன் ஏற்றுமதி வருவாயை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மரண அறிவித்தல்

பிறப்பு 12 – 12 – 1980

இறப்பு 21 – 09 – 2025



## அருட்தந்தை லூக்காஸ் றெஜினி யூட் அவலின், அ.ம.தி

**(Fr.Lucas Regini Jude Avalin, O.M.I)**

அவர்கள் 21.09.2025 அன்று மாலை அகால மரணம் அடைந்தார்.

அவரது பூதவுடலானது நாளை (25.09.2025) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணிவரை சுவாமியார் வீதி, கொழும்புத்துறையில் அமைந்துள்ள புனித டீ மசநெட் சிற்றாலயத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் யாழ். புனித மரியன்னை பேராலயத்திற்கு எடுத்துச் செல்லப்படும். பிற்பகல் 3.00 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டு யாழ். புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: அமலமரித்தியாகிகள் யாழ் மாகாணம். (5492)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## யாழ். மாவட்ட ரீதியிலான துடுப்பாட்டத் தொடர்; தெல்லிப்பழை பிரதேச அணி சம்பியன்



35ஆவது தேசிய இளைஞர் விளையாட்டு விழாவில் யாழ் மாவட்ட ரீதியிலான பெண்களுக்கு இடையிலான துடுப்பாட்டப் போட்டியில் தெல்லிப்பழை பிரதேச அணி சம்பியனாகியுள்ளது.

நெல்லியடி கொலின்ஸ் மைதானத்தில் நேற்றைய தினம் இடம்பெற்ற இறுதிச்சுற்றில் தெல்லிப் பழை பிரதேச அணி, கரவெட்டி அணியினை எதிர் கொண்டது.

போட்டியில் கரவெட்டி அணியினர் 28 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில், 29 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு களமிறங்கிய தெல்லிப் பழை பிரதேச அணி 2.3 பந்து பரிமாற்றங்கள் நிறைவில் ஆட்டமிழப்பு எதுவும் இன்றி வெற்றி பெற்று சம்பியனானது. (3-33)

## மின்சார...

கருத்துத் தெரிவிக்கும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

மின்சார சபை பணியாளர்களின் தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகள் இருந்தபோதிலும் நாட்டில் மின்சார நெருக்கடியோ அல்லது மின்வெட்டோ ஏற்பட அரசாங்கம் இடமளிக்காது. தொடர்ச்சியான மின்சார விநியோகம் உறுதிசெய்யப்படும் என்றும் சட்டத்தை மீறுவோருக்கு கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்தார்.

அதேநேரம் இலங்கை மின்சார சபை மறுசீரமைக்கப்படாவிட்டால் நெருக்கடியைத் தவிர்க்க முடியாது என்றும் அதனைத் தனியார்மயப்படுத்தும் எண்ணம் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் அவர் வலியுறுத்தினார். (ம-7)

## இனப் பிரச்சினை...

"தமிழ்த் தேசியப் பிரச்சினைக்கான தீர்வு" என்ற தலைப்பில் நேற்று முன் தினம் அனுப்பப்பட்ட அந்தக் கடிதத்தில்,

"நமது கட்சியின் சமீபத்திய மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக உங்களுக்கு எழுத முடிவு செய்யப்பட்டது.

நீங்கள் நாட்டின் ஜனாதிபதியாகப் பதவியேற்று ஒரு வருடம் ஆகின்றது. உங்கள் தேர்தல் அறிக்கையிலும் மற்றும் பல அறிவிப்புகளிலும் இந்த மிக முக்கியமான பிரச்சினையைத் தீர்ப்பீர்கள் என நீங்கள் உறுதியளித்துள்ளீர்கள்.

இருப்பினும் கடந்த ஒரு வருடமாக இந்த விஷயத்தில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

முதன்மையான தமிழ் அரசியல் கட்சியாக, மேற்கூறிய பிரச்சினை தொடர்பாக உங்கள் அரசுடன் கலந்துரையாட நாங்கள் தயாராக உள்ளோம். அந்தவகையில் உங்களைச் சந்திக்க கீழே கையொப்பமிடப்பட்ட தலைவர், பொதுச் செயலாளர் மற்றும் எங்கள் எட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்கிய ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட குழு உங்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும் நேரத்தில் உங்களைச் சந்திக்க ஒரு நேரத்தை ஒதுக்கித்தருமாறு வேண்டுகின்றோம்" என்றுள்ளது. (ம-7)

## ஜனாதிபதியை...


ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரி அஜித் தர்மபால இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இணைய ஊடகம் ஒன்றில் இடம்பெற்ற நேர்காணலில் கலந்து கொண்டு பேசிய அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி பாதுகாப்புப் பிரிவு அல்லது பாதுகாப்புப் பிரிவின் உறுப்பினராக மாறுவேடமிட்ட ஒரு கொலையாளி மூலம் இந்தத் திட்டம் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இந்தத் தகவல் மிகவும் நம்பகமான ஆதாரங்களில் இருந்து பெறப்பட்டதாகவும், அதைப் புறக்கணிக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார். (ம-7)

## ஜொலிஸ்ரார் கிண்ணத் தொடர்
# யூனியன்ஸ் அணி
## 2 ஆவது சுற்றுக்குத் தகுதி



ஜொலிஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத் தொடர் பல வருடங்களின் பின்னர் இவ் வருடம் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான 2 ஆவது தகுதிச்சுற்று தொடரில் யூனியன்ஸ் அணியை எதிர்த்து அரியாலை அணி மோதிக் கொண்டது.

அந்த வகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன்ஸ் அணி 27 ஓவர்களில் 8 விக்கெட்டுகளை இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அணியில் ரகுபதி 27 ஓட்டங்களையும். சுஜந்தன் 21 ஓட்டங்களையும், மோகன்ராஜ் 31 ஓட்டங்களையும், லவன்ராஜ் 48 ஓட்டங்களையும், மகிலீராஜ் 29 ஓட்டங்களையும் மற்றும் மகிந்தன் 38 ஓட்டங்களையும் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் அரியாலை அணி சார்பில் சதீஸன் 2 விக்கெட்டுகளையும் சினீதீபன் 3 விக்கெட்டுக்களையும் மற்றும் தினேஜன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர்.

213 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய அரியாலை அணி 27 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 136 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக்கொண்டது. அணியில் துவாரகன் 24 ஓட்டங்களையும் சதீஷ் 24 ஓட்டங்களையும் மற்றும் லக்ஷன் 22 ஓட்டங்களையும் அதிக பட்சமாகப் பெற்றிருந்தனர். பந்து வீச்சில் யூனியன்ஸ் அணியைச் சேர்ந்த மோகன்ராஜ் 4 விக்கெட்டுக்களையும் மகீதரன், பவிதரன், நிஷானுஜன் மற்றும் அரிகரன் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி இருந்தனர். இந்த வெற்றியின் மூலம் ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்துக்கான 2 ஆவது சுற்றுக்கு யூனியன்ஸ் அணி தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. (3)

## பெண்களுக்கான உதைபந்தாட்டத் தொடரில் சம்பியனானது தெல்லிப்பழை அணி



தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் 35வது இளைஞர் விளையாட்டு விழாவில் பெண்களுக்கான உதைப்பந்தாட்ட போட்டியில் தெல்லிப்பளை பிரதேச உதைபந்தாட்ட பெண்கள் அணி மாவட்ட சாம்பியனானது.

உடுப்பிட்டி இமையானன் மத்தி விளையாட்டு கழக மைதானத்தில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்ற இறுதிப் போட்டியில் சண்டிலிப்பாய் பிரதேச அணியை, எதிர்த்து தெல்லிப்பழை பெண்கள் அணி மோதியிருந்தது.

இறுதியில் 6:0 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பழை பிரதேச உதைபந்தாட்ட அணி சம்பியனைக் கைப்பற்றியது. (3-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இழப்பீடு செலுத்த மறுத்த பேர்ள் கப்பல் நிறுவனம்

(கொழும்பு)

இலங்கை உச்சநீதிமன்றத்தினால் விதிக்கப்பட்ட ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பீட்டைச் செலுத்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனம் மறுப்புத் தெரிவித்துள்ளது.

கடந்த 2021ஆம் ஆண்டு கொழும்புத் துறைமுகம் அருகே எக்ஸ்பிரஸ் பேர்ள் எனப்படும் சிங்கப்பூர் கப்பல் ஒன்று தீப்பற்றி முற்றாக எரிந்து கடலில் மூழ்கியது.

குறித்த தீவிபத்தின் காரணமாக இலங்கைக் கடற்பரப்பை அண்டிய நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் இலங்கையின் சுற்றுச் சூழலுக்கு கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டிருந்தன.

இதனைக் கருத்திற் கொண்டு பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உள்ளிட்டோர் முன்வைத்த அடிப்படை உரிமை மீறல் மனுவை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட உச்சநீதிமன்றம் குறித்த தீவிபத்தைத் தடுக்கத் தவறியமை காரணமாக எக்ஸ்பிரஸ் கப்பல் நிறுவனத்திற்கு ஒரு பில்லியன் அமெரிக்க டொலர்கள் இழப்பீட்டைச் செலுத்துமாறு உத்தரவிட்டிருந்தது.

எனினும், குறித்த இழப்பீட்டைச் செலுத்த எக்ஸ்பிரஸ் பேர்ள் கப்பல் நிறுவனம் மறுப்புத் தெரிவித்துள்ளது. (நி)

# முன்னாள் குடிவரவு -குடியகல்வுத் திணைக்கள கட்டுப்பாட்டாளர் நாயகத்திற்கு 2 வருடங்கள் சிறை



(கொழும்பு)

முன்னாள் குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டியவுக்கு உயர் நீதிமன்றம் நேற்று இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்தது.

இலங்கையின் இ-விசா செயல்முறையை இடைநிறுத்துவது தொடர்பான இடைக்கால உத்தரவை மீறியதற்கான நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டுக்காக அவருக்கு இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிபதிகள் ஜனக் டி சில்வா மற்றும் அர்ஜுன் ஒபேசேகர ஆகியோரின் ஒப்புதலுடன், நீதிபதி யசந்த கோடகொட இந்த தீர்ப்பை அறிவித்தார்.

தீர்ப்பை வழங்கும்போது, ஹர்ஷ இலுக்பிட்டிய தனது செயல்கள் மூலம் நீதித்துறைக்கு எதிராக கடுமையான அவமதிப்புச் செயலைச் செய்துள்ளதாக நீதிபதி கோடகொட கூறினார்.

நாட்டின் ஒன்லைன் விசா முறையை நிர்வகிக்க VFS குளோபல் நிறுவனத்துடனான அரசாங்கத்தின் ஒப்பந்தத்தைச் சுற்றியுள்ள சர்ச்சையிலிருந்து இந்த வழக்கு உருவாகிறது.

அதிகரித்து வரும் விமர்சனங்கள் மற்றும் சட்ட சவால்களுக்கு மத்தியில், புதிய இ-விசா செயல்முறையை செயற்படுத்துவதை நிறுத்தி உயர் நீதிமன்றம் முன்னதாக ஒரு இடைக்கால உத்தரவை பிறப்பித்தது. (நி)

# அரச சேவைகளை இலகுவில் பெற புதிய செயலி அறிமுகம்

(கொழும்பு)

பொதுமக்கள் அரச சேவைகளை இலகுவாக அணுக உதவும் வகையில் 'Govern ment Super' என்ற செயலியொன்றை உருவாக்குவதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

வெவ்வேறு அரசத் திணைக்களங்களில் வெவ்வேறு அமைப்புகள், பல அங்கீகார செயல்முறைகள் மற்றும் மீண்டும் மீண்டும் தரவு உள்ளீடு தேவைப்படும் அரச சேவைகளை வழங்குவதற்கான தற்போதைய வேறுபட்ட அணுகுமுறைகள் பொது மக்களுக்கு குறிப்பிடத்தக்க சிரமத்தை ஏற்படுத்துவதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

இது ஆண்டுதோறும் ரூ. 500 மில்லியனுக்கும் அதிகமான பொருளாதார இழப்பை ஏற்படுத்துவதாகவும் மதிப்பிடப் பட்டுள்ளது.

எனவே, இலங்கையின் டிஜிற்றல் பொருளாதாரத் திட்டத்திற்கு இணங்க, ஒரே கணினி பயன்பாட்டின் மூலம் குடிமக்களுக்கு பரந்த அளவிலான அரச சேவைகளை உள்ளடக்கிய 'Government Super'செயலியை உருவாக்குவது ஒரு மூலோபாய முன்னுரிமையாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தத் திட்டம், இலங்கையின் 18 வயதுக்கு மேற்பட்ட 14 மில்லியன் குடிமக்களும், ஆண்டுக்கு 2 மில்லியன் பார்வையாளர்களும் ஒரே இடைமுகத்தின் மூலம் அரச சேவைகளை தடையின்றி அணுக உதவும் ஒரு டிஜிற்றல் தளத்தை உருவாக்கும்.

இது அனைத்து அரச சேவைகளையும் ஒரே பயனர் நட்பு கைபேசி செயலி மற்றும் வலை பயன்பாட்டில் ஒருங்கிணைக்கும்.

அதன்படி, 2025-2026 காலகட்டத்தில் மொத்தம் ரூ. 500 மில்லியன் செலவில் 'Government Super' செயலி விண்ணப்பத் திட்டத்தை இரண்டு கட்டங்களாக செயற்படுத்த டிஜிற்றல் பொருளாதார அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சமர்ப்பித்த முன்மொழிவுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. (நி)

# கடல்சார் பாதுகாப்பு பணிகள் கடற்படையிடம்

(கொழும்பு)

கடல்சார் பாதுகாப்பை வழங்கும் தனியார் நிறுவனங்களின் செயற்பாடுகள் இலங்கை கடற்படையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன நேற்று பாராளுமன்றத்தில் இதனை அறிவித்தார்.

குறித்த தனியார் நிறுவனங்களால் கடலில் பயணிக்கும் வணிக கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு வந்தது.

இந்தநிலையில், கடற்படை கட்டளைச் சட்டத்தின் பிரிவு 21 இன் படி ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவினால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (நி)


## இந்திய சாஸ்திரியார் வருகை

சிங்கப்பூர், மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் ஓம் சக்தி அருள்வாக்கு பெற்ற **இரத்தினசாமி** சாஸ்திரியார் அவர்கள் யாழ் வருகை. ஜாதகம், கைரேகை, எண் கணிதம் மற்றும் தொழில் முன்னேற்றம் இன்மை, புதிய தொழில் தொடங்க, திருமணத்தடை, வாழ்வில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை வெளிநாடு செல்ல தடை, கல்வியில் தடை, குழந்தை பாக்கியம் மற்றும் எந்த பிரச்சினைக்கும் நேரில்.

தொடர்புகளுக்கு-**076 682 7368**

யாழ் கச்சேரிக்கு அருகாமையில், சுண்டுக்குளி

(முன்பதிவு செய்து வரவும்)

(c-3942)


# இராசிபலன்

24.09.2025
புரட்டாதி 08, புதன்கிழமை
திருதியை பின்னிரவு 5.54 மணிவரை

சித்திரை பிற்பகல் 4.22 மணிவரை
சுப நேரம் 4.32-6.02 மணிவரை
இராகுகாலம் 12.02-1.32 மணிவரை

சந்திராஷ்டமம்
பூரட்டாதி, உத்தரட்டாதி

வளவன்

**மேஷம்**
சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், மறக்க முடியாத இனிய சம்பவம் ஒன்று நடைபெறலாம், நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவார்கள்.

**கடகம்**
கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காக உறவினர் உதவியை நாடுவீர்கள், தேவைகள் பூர்த்தியாகும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**துலாம்**
ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், சுப விரயங்கள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்**
செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், சான்றோர்களின் சந்திப்பு இடம் பெறலாம், விரதம் வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**
தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், குடும்பத்தில் சுகம் கூடும், சந்தோசம் அதிகரிக்கும் நாள், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும்.

**சிம்மம்**
சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட முன்னேற்றம் காணும் நாள், உறவு பகை பாராமல் ஒற்றுமையாகச் செயற்படுவீர்கள், போசன சுகமுண்டு.

**விருச்சிகம்**
பிரபலமானவரின் சந்திப்பு இடம்பெறலாம், தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், சுப செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டால் முன்னேற்றம் காணும் நாள்.

**கும்பம்**
அலுவலக பணிகள் துரிதமாக நடைபெறும், நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், உடல் நலன் சீராகும், விருந்தினர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**மிதுனம்**
நன்மைகள் நாடி வரும் நாள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள்.

**கன்னி**
வங்கி சேமிப்பை உயர்த்த முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், புதிய முயற்சிகள் கைகூடும்.

**தனுசு**
பொருளாதார நிலையில் முன்னேற்றம் ஏற்படலாம், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள்.

**மீனம்**
தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் கவனம் தேவை, திடீர் செலவுகள் இடம் பெறலாம், வழிபாட்டால் சிறப்பினைக் காண வேண்டிய நாள்.

முயற்சி செய்தால் எந்த வேலையையும் செய்ய முடியும்.

noolaham.org | aavanaham.org

# தியாகதீபம் திலீபனின் 9ஆம் நாள் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

தியாகதீபம் திலீபனின் 9ஆம் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் நேற்று செவ்வாய்க் கிழமை முன்னெடுக்கப்பட்டது.

நல்லூர் பின் வீதியில் அமைந்துள்ள தியாக தீபத்தின் நினைவிடத்தில், சுடரேற்றி, திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதேவேளை தியாகதீபத்தின் திருவுருவ படத்தை தாங்கிய ஊர்தியும் நினைவிடத்திற்கு வருகை தந்த நிலையில், ஊர்தியில் இருந்த திருவுருவ படத்திற்கும் மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (8-33)



# ஆட்சேர்ப்பு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் காணப்படும் பரிசாரகர் (ஆண் மற்றும் பெண்) - தரம் III பதவிக்கு காணப்படும் 25 வெற்றிடங்களுக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழுவால் கோரப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் செயலாளர் ஆ.சிறி அறிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்ட 18 - 45 வயதுக்கு உட்பட்ட, க.பொ.த. (சா/தர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருப்பதுடன், ஒரு அமர்வில் ஆகக் குறைந்தது ஐந்து பாடங்களில் சித்தி பெற்றவர்களும், அத்துடன் தொழிற் தகைமை மட்டம் 2 அல்லது 3 இற்கு (NVQ - 2 / NVQ - 3) குறையாதவாறு மூன்றாம் நிலைக்கல்வி மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட தேசிய தொழிற் தகைமை சான்றிதழை பதவியுடன் தொடர்புடைய துறையில் பெற்றவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.10.10 ஆகும்.

இது தொடர்பான முழுமையான அறிவித்தலை www.np.gov.lk ⊡ Exams and Recruitments ⊡ Advertisement ⊡ 2025 எனும் வடக்கு மாகாண சபை இணையத்தளத் தொடர்பினூடாக பார்வையிட முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(8)

# தியாகதீபம் திலீபனுக்கு பருத்தித்துறையில் நினைவேந்தல்



(அராலி)

தியாகதீபம் திலீபனின் 38 ஆவது ஆண்டு நினைவேந்தல் பருத்தித்துறையில் உள்ள அவரது நினைவிடத்தில் வடமராட்சி மக்களால் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஈகைச் சுடரினை மாவீரர் லெப்டினென்ட் தென்றலின் சகோதரரும், ஜனநாயக போராளிகள் கட்சித் தலைவருமான சி.வேந்தன் ஏற்றிவைக்க மலர் மாலையினை பருத்தித்துறை நகரசபையின் தவிசாளர் வின்சன் டீ டக்ளஸ் போல் அணிவித்தார். தொடர்ந்து பருத்தித்துறை நகர சபை உறுப்பினர் ஜெ.ஜயகோபி, காணி உரிமைக்கான மக்கள் இயக்க தலைவர் இ.முரளிதரன் ஆகியோர்மலர்மாலையை அணிவித்தனர்.

தொடர்ந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் அமைப்பு பிரதிநிதி க.தவராசா அஞ்சலியை ஆரம்பித்து வைத்ததை தொடர்ந்து நிகழ்வில் கலந்துகொண்ட அனைவரும் அஞ்சலி செலுத்தினர்.

இதில் ஆயுள்வேத மருத்துவரும், தமிழ் மக்கள் கூட்டணி வடமராட்சி அமைப்பாளருமான சிவகுமார், பருத்தித்துறை பிரதேசசபை உறுப்பினர்கள் திருமதி சுரேஸ்குமார் உட்பட பலரும் கலந்து கொண்டு தியாகி திலீபனுக்கு அஞ்சலி செலுத்தினர். (8-104)

# சாவகச்சேரியில் மருத்துவ முகாம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி நகரசபையானது உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கல்வயல் வட்டாரத்தில் மருத்துவ முகாம் நிகழ்வினை கடந்த ஞாயிற்றுக் கிழமை முன்னெடுத்துள்ளது.

இதன்போது நீரிழிவு, உயர் குருதி அமுக்கம் போன்ற தொற்றா நோய்களுக்கான பரிசோதனைகள் இடம்பெற்றதுடன், பார்வைக் குறைபாடு உள்ளவர்களுக்கு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் வாசிப்பதற்கு ஏற்ற மூக்குக் கண்ணாடிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

கல்வயல் பொதுநோக்கு மண்டபத்தில் இடம்பெற்ற மேற்படி மருத்துவ முகாம் நிகழ்வில் சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் ஶ்ரீபிரகாஷ் ,சபை உறுப்பினர்கள்,லயன்ஸ் கழகப் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டதுடன், 35வயதிற்கு மேற்பட்ட பொதுமக்கள் பலரும் மருத்துவ முகாம் நிகழ்வின் ஊடாகப் பயனடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.(8-30)

# போதைப் பொருளுடன் ஒருவர் கைது

(கரணவாய்)


காங்கேசன்துறை பிராந்திய குற்றத் தடுப்புப் பிரிவினரால் பருத்தித்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது கெரோயின் போதைப் பொருளுடன் சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரிடமிருந்து 8 ஆயிரத்து 460 மில்லி கிராம் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

சந்தேக நபரையும் சான்றுப் பொருளையும் பருத்தித்துறைப் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தி பருத்தித்துறை நீதவான் நீதி மன்றத்தில் முற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (8-60)

# சட்டவிரோத செயற்பாடுகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## இளங்குமரன் எம்.பி



(சாவகச்சேரி)

தென்மராட்சியில் உரிய அனுமதிகள் இன்றி பொது மக்களுக்கும் அதேவேளை சுற்றுச்சூழலுக்கும் ஆபத்து விளைவிக்கும் முறையில் இயங்கி வருகின்ற தொழிற்சாலைகளை உடனடியாக மூடுவதுடன், அது தொடர்பில் உரிய திணைக்களங்கள் நீதிமன்றத்தில் வழக்குப் பதிவு செய்ய வேண்டும் எனவும் பாராளுமன்ற உறுப்பினரும் தென்மராட்சிப் பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான க.இளங்குமரன் பணித்துள்ளார்.

அண்மையில் இடம்பெற்ற தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தின் போதே அவர் இதனை வலியுறுத்தியிருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்

சட்டவிரோத செயற்பாடுகள் தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்க வேண்டும். பக்கச்சார்பாக நடக்கக் கூடாது.

சரசாலைப் பகுதியில் இடம்பெற்ற சட்டவிரோத சுண்ணக்கல் அகழ்வு விடயத்தில் பலருடைய அசமந்தப்போக்குக் காணப்படுகின்றது. அனுமதி இல்லாத விடயங்களை அனுமதிக்கக்கூடாது. பொறுப்பு வாய்ந்த பிரதேச சபை, பிரதேச செயலகம், சுற்றுச்சூழல் அதிகார சபை ஆகியன நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சரசாலையில் கல் உடைக்கும் ஆலைக்கு உரிய திணைக்களங்களின் அனுமதி இல்லாவிட்டால் அதனை உடனடியாக மூட பிரதேசசபை நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் அனுமதி இல்லாமல் இயங்கிய காரணத்திற்காக நீதிமன்றத்தில் வழக்கும் பதிவு செய்ய வேண்டும்.

சட்டவிரோத செயற்பாடுகள் மீது நாம் நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் அது சுற்றுச்சூழலுக்கும் மக்களுக்கும் ஆபத்தானதாக மாறிவிடும் என மேலும் அவர் குறிப்பிட்டிருந்தார். (8-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 150 | 280 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | 200 | 200 | 240 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 150 | 200 | 300 |
| தக்காளி | 250 | 160 | 250 | 220 | 240 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 300 | 200 | 200 |
| கோவா | 200 | 200 | 250 | 180 | 200 |
| கரட் | 200 | 300 | 350 | 230 | 250 |
| பூசணி | 60 | 60 | 50 | 40 | 50 |
| புடோல் | 100 | 150 | 120 | 100 | 250 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 100 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 300 | 250 | 280 |
| பெரிய வெங்காயம் | 160 | 160 | 160 | 140 | 160 |
| பாகற்காய் | 600 | 600 | 600 | 600 | 800 |
| வெண்டக்காய் | 150 | 200 | 100 | 150 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 330 | 250 | 250 | 400 |
| பயற்றங்காய் | 300 | 250 | 300 | 350 | 300 |
| லீக்ஸ் | 200 | 200 | 300 | 170 | 200 |
| பீற்றூட் | 100 | 80 | 150 | 100 | 150 |
| கறிமிளகாய் | 350 | 350 | 350 | 300 | 350 |
| முருங்கைக்காய் | 400 | 400 | 400 | 350 | 300 |
| போஞ்சி | 600 | 500 | 600 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 120 | 150 | 150 | -- | 180 |
| கீரை - 1 பிடி | 140 | 60-140 | 150 | 100 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1000 | 1200 | 2000 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 200 | 150 | 170-230 | 160-220 |
| இராசவள்ளி | 800 | 600 | 1000 | 500 | 1000 |
| வெங்காயப்பூ | 400 | 300 | 600 | 100 | 350 |
| முள்ளங்கி | 120 | 150 | 150 | 80 | 150 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 200 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 60 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | 100 | 150 | 150 | 90 | 250 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரத்ததான முகாம்

(அராலி)

தமிழர் தாயகம் எங்கும் தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் வாரமானது உணர்வு ரீதியாக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

அந்தவகையில் "உயிர் கொடுத்த உத்தமனுக்காய் உதிரம் கொடுப்போம்" எனும் தொனிப்பொருளில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் மாணவர் ஒன்றியத்தால் இரத்ததான முகாம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த இரத்ததான முகாமானது இன்று புதன்கிழமை மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 3.00 மணிவரை யாழ். பல்கலைக்கழக மாணவர் கட்டடத் தொகுதியில் இடம்பெறவுள்ளதென ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (3-104)



2025 ஆம் ஆண்டிற்கான தேசிய மட்ட தமிழ்த் தினப் போட்டியில் (தனிநபர் நடனப் பிரிவு) யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவி செல்வி. வைஷிகா மனோகரன் தேசிய மட்ட சம்பியனாகத் தெரிவாகி முதலாம் இடத்தைப் பெருமையுடன் கைப்பற்றியுள்ளார்.

# முன்பள்ளிகளின் முன்னேற்றம் தொடர்பான கருத்தமர்வு

(சாவகச்சேரி)

கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் ஏற்பாட்டில் மன்னார் மாவட்ட முன்பள்ளிகளின் முன்னேற்றம் தொடர்பான கருத்தமர்வு எதிர்வரும் 27 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு மாவட்ட செயலக மருதம் மாநாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி கருத்தமர்வில் பிரதம விருந்தினராக கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகர் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

மேலும் கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் தலைவர் ம.சூரியசேகரம், கல்வி அபிவிருத்திக் குழுமத்தின் காப்பாளர் ந.சச்சிதானந்தன் மற்றும் யாழ் தேசிய கல்வியற் கல்லூரி உபபீடாதிபதி கலாநிதி பா.தனபாலன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதன்போது முன்பள்ளி கல்விக் கூடங்கள், முன்பள்ளி மழலைகள் மற்றும் முன் பள்ளி ஆசிரியர்களின் முன்னேற்றம், ஆசிரியர்களின் ஊதியம், ஓய்வூதியம் ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட விருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (3-30)

# தியாகதீபம் திலீபனுக்கு புங்குடுதீவில் நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

தியாக தீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு தீவகம் நினைவேந்தல் குழுவின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் யாழ் புங்குடுதீவு பகுதியில் தியாக தீபம் திலீபனின் உருவப்படம் தாங்கிய ஊர்திபவனி ஆரம்பமாகி நடைபெற்றது.

தியாகி தீபம் திலீபனின் உருவப்படத்திற்கு பொதுச் சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மரைஞ்சலி செலுத்தப்பட்டது. (8-33)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

பொன்னாலை வீதி, அராலி மேற்கு, வட்டுக்கோட்டை கொற்கைத்துறை இந்து மயான நுழைவாயிலிலுள்ள ஞானவைரவப் பெருமான் திருக்கோவில் புனராவர்த்தன பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் இடம் பெறவுள்ளது.

நாளை வியாழக்கிழமை சுவாதி நட்சத்திரமும் சதுர்த்தி திதியும் அமிர்தசித்த யோகமும் கூடிய காலை 7.02 மணி முதல் 8.46 மணிவரையான சுப முகூர்த்த வேளையில் பெருமானுக்கு மஹா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளதென கொற்கைத் துறை இந்து மயான அபிவிருத்திச் சபையினர் அறிவித்துள்ளனர். (3)

# கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாயக்குழுக் கூட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் நடப்பாண்டுக்கான மூன்றாவது விவசாய குழுக் கூட்டம் நேற்று செவ்வாய்கிழமை காலை 10 மணிக்கு நடைபெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாடு மண்டபத்தில் குறித்த கலந்துரையாடல் நடை பெற்றது.

இக் கலந்துரையாடலில் கிளிநொச்சி மாவட்டத்தின் விவசாய துறைசார்ந்த பல்வேறு விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

குறிப்பாக கிளிநொச்சி மாவட்டத்தில் எதிர்வரும் பெரும் போக விவசாய செய்கையின் போது மேற்கொள்ளப்பட வேண்டிய முக்கிய தீர்மானங்கள் பற்றி இங்கு கலந்துரையாடப்பட்டன.

இதன்போது விவசாய துறையுடன் தொடர்புடைய திணைக்களங்களினால் துறைசார்ந்து தற்போது நடை முறைப்படுத்தப்பட்டு வருகின்ற திட்டங்கள் தொடர்பில் துறை சார்ந்த திணைக்களத் தலைவர்களால் விளக்கமளிக்கப்பட்டன.

மேலும் பயிர்ச்செய்கை குழுக் கூட்டங்கள், பயிரழிவு மதிப்பீடு தொடர்பான பிரச்சினைகள், பூச்சித் தாக்கங்கள், உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் (காணி), மாவட்ட பதில் விவசாய பணிப்பாளர், பிரதேச செயலாளர்கள், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர், நீர்ப்பாசன பொறியியலாளர்கள், கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர், பிரதி மாகாண விவ சாய பணிப்பாளர், யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் பேராசிரியர், மாவட்ட செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், துறை சார்ந்த பல்வேறு திணைக்களங்களின் அதிகாரிகள் மற்றும் விடயதான உத்தியோகத்தர்கள், விவசாய சம்மேளனங்களின் அங்கத்தவர்கள், மாவட்ட விவசாயப் பிரிவின் உத்தியோகத்தர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டனர். (8-315)

# குடிநீர் விநியோகத்திட்டம்; கலந்துரையாடல்



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் குடிநீர் விநியோகத் திட்ட அதிகாரிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் யாழ். மாவட்டத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் குடிநீர் விநியோகத் திட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் ஆராயப்பட்டது. திட்டத்தின் சில தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான ஏற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

எதிர்காலத்தில் யாழ்ப்பாண நகரத்தின் கழிவுநீர் முகாமைத்துவம் தொடர்பான திட்டத்துக்கு ஆசிய அபிவிருத்தி வங்கி நிதி உதவி வழங்குவதற்கு திட்டமிடுவதாகவும் இது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. கடந்த காலங்களில் யாழ்ப்பாணம் குடிநீர் விநியோகத் திட்டத்தில் இந்த விடயமும் உள்ளடக்கப்பட்டிருந்தாலும் அது கைவிடப்பட்டிருந்த நிலையில் மீளவும் செயற்படுத்துவது தொடர்பிலும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கான இரண்டாம் கட்ட குடிநீர் விநியோகத் திட்டத்திற்கு உதவுவதற்குத் தயாராக உள்ளதாகவும் இது தொடர்பில் அரசாங்கத்துடன் கலந்துரையாடி வருவதாகவும் ஆளுநருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் பிரதிநிதிகள், யாழ்ப்பாணம் குடிநீர் விநியோகத் திட்டத்தின் பிரதிநிதிகள், ஆளுநரின் செயலாளர் மற்றும் ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (8)



தியாக தீபத்தின் நினைவேந்தலை முன்னிட்டு யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரத்ததான முகாம் நடைபெற்றது. அதன்போது, பாடசாலை பழைய மாணவர்கள் உள்ளிட்ட பலர் இரத்ததான முகாமில் கலந்து கொண்டு இரத்த தானம் வழங்கினர். (படம்- சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# பாரதம்

## 60 ஆண்டுகளுக்குப் பின் ஐ.நா சபை கூட்டத்தில் சிரியா பங்கேற்பு



(சிரியா)

கடந்த 1967ஆம் ஆண்டுக்கு பின், ஐ.நா கூட்டங்களில் கலந்து கொள்ளும் முதல் சிரியா நாட்டு தலைவர் என்ற பெருமையை அஹமது அல் - ஷரா பெறுகிறார்.

ஐக்கிய நாடுகள் சபையின் 80ஆவது பொதுச் சபை கூட்டத்தில் பங்கேற்க, மேற்காசிய நாடான சிரியாவின் ஜனாதிபதி அஹமது அல் - ஷரா நியூயோர்க் சென்றடைந்தார்.

ஐ.நா பொதுச்சபையில் கலந்துகொண்ட கடைசி சிரியா ஜனாதிபதி நூரெட்டின் அல் - அடாசி ஆவார். அவர் கடந்த 1967ஆம் ஆண்டு ஜூன் மாதம் கலந்து கொண்டார்.

இதையடுத்து, ஆட்சியை கைப்பற்றிய பஷார் அல் - ஆசாத், நீண்டகாலம் சிரியாவில் ஆட்சி செய்த போதும், சர்வதேச சமூகத்திடம் இருந்து விலகியே இருந்தார்.

முன்னாள் பயங்கரவாதியான ஷரா, கடந்தாண்டு பஷார் அல் - ஆசாத்திடம் இருந்து சிரியாவின் ஆட்சியை கைப்பற்றினார்.

இதையடுத்து, கடந்த மே மாதம் சவுதி தலைநகர் ரியாத்தில் நடந்த ஒரு கூட்டத்தில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பை சந்தித்தார். சிரியா மீதான பல்வேறு தடைகளை அமெரிக்கா நீக்கியது. (நி)

## பாலஸ்தீனத்தை தனி ந... ஐ.நா சபையில் பி...

(ஜெனீவா)

**பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதாக பிரான்ஸ் நாடும் அறிவித்துள்ளது.**

**ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு கூட்டத்தில் பிரான்ஸ் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரான் இதனை அறிவித்தார்.**

பாலஸ்தீனம் மேற்கு கரை, காசா முனை என 2 பகுதிகளாக உள்ளது. இதில் காசா முனையை ஹமாஸ் ஆயுதக் குழுவினரும், மேற்கு கரையை முகமது அப்பாஸ் தலைமையிலான பாலஸ்தீன அரசும் நிர்வகித்து வருகின்றனர்.

கடந்த 2023ஆம் ஆண்டில் ஹமாஸ் ஆயுதக்குழு இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர்.

இதைத் தொடர்ந்து காசா முனை

## பிலிப்பைன்ஸில் 'ரகசா' புயல்!

### ➤ 10 ஆயிரம் மக்கள் வெளியேற்றம்
### ➤ உஷார் நிலையில் சீனா, தாய்வான்

(பிலிப்பைன்ஸ்)

பிலிப்பைன்சின் வடக்கு பகுதியில் ககாயன் மாகாணம் அருகே "ரகசா" என்ற புதிய புயல் உருவாகி உள்ளது.

இந்த புயல் மணிக்கு 215 கி.மீ. வேகத்தில் காற்று வீசி மழை பெய்வதால் முன்னெச்சரிக்கையாக 10,000இற்கும் மேற்பட்ட மக்கள் பள்ளிகள் மற்றும் நிவாரண மையங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பலத்த மழை மற்றும் நிலச்சரிவு ஏற்படும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

புயல் காரணமாக, மணிலா மற்றும் 29 மாகாணங்களில் உள்ள பள்ளிகள் மற்றும் அரசு அலுவலகங்கள் மூடப்பட்டுள்ளன.

புயல் எச்சரிக்கைகள் காரணமாக, உள்நாட்டு விமான சேவைகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

இதனை தொடர்ந்து புயல் சீனாவின் குவாங்டாங் மாகாணத்தை நோக்கி நகரும் என கணிக்கப்பட்டு உள்ளது. இதனால் அங்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அங்கு 4,00,000 மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு மாற்ற அரசு முடிவு செய்துள்ளது.



முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அங்கு 500இற்கும் மேற்பட்ட விமான சேவை இரத்து செய்யப்பட்டுள்ளன.

புயல் செல்லும் வழியில் உள்ள தாய்வான் நாட்டிலும் அதிகாரிகள் உஷார் நிலையில் உள்ளனர். (நி)


## "பாலஸ்தீனம் ஒரு உரிமை... ஐ.நா பொதுச்செயலாளர்...

(ஜெனீவா)

இஸ்ரேல் மற்றும் பாலஸ்தீனத்திற்கு இடையிலான மோதல் குறித்து விவாதிக்க ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தில் நடைபெற்ற உறுப்பு நாடுகள் கூட்டத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டெரெஸ், பாலஸ்தீன நாடு என்பது ஒரு உரிமை, அது பரிசு அல்ல என்று வலியுறுத்திப் பேசினார்.

பல தலைமுறைகளாகத் தீர்க்கப்படாமல் உள்ள இந்த மோதலில், பேச்சு வார்த்தைகள் நம்பிக்கை இழந்து விட்டன.

ஐ.நா. தீர்மானங்கள் மற்றும் ஒப்பந்தங்கள் புறக்கணிக்கப்படுகின்றன என்று குட்டெரெஸ் வருத்தத்துடன் தெரிவித்தார்.



இந்த மோதலுக்கு "இருநாடு... என்பதே ஒரே தீர்வு என்றும், இஸ்... மற்றும் பாலஸ்தீனம் ஆகிய இர... இறையாண்மை கொண்ட, சுத... மற்றும் ஜனநாயக நாடுகள் தா... அங்கீகரிக்கப்பட்ட எல்லைகளுக்... அமைதியாகவும் பாதுகாப்பாகவும் ... வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்...

சர்வதேச சட்டம் மற்றும் ஐ... தீர்மானங்களின்படி, இருநாடுகளு... ஜெருசலேம் நகரைத் தலைநகரா... கொண்டிருக்க வேண்டும் என்றும் அ... வலியுறுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடாக அங்கீகரிப்பதாக பிரான்ஸ் அறிவிப்பு





யில் செயற்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக்குழு மீது போர் அறிவித்த இஸ்ரேல் 2 ஆண்டாக தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்தப் போரில் 65 ஆயிரத்திற்கும் அதிகமானோர் பலியாகி உள்ளனர்.

அதேவேளை, பாலஸ்தீனத்தை தனிநாடாக 140 இற்கும் மேற்பட்ட நாடுகள் அங்கீகரித்துள்ளன.

இஸ்ரேல், அமெரிக்கா போன்ற நாடுகள் பாலஸ்தீனத்தை அங்கீகரிக்கவில்லை.

இதற்கிடையே, பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதாக இங்கிலாந்து, கனடா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் அறிவித்துள்ளன.

உலக நாடுகள் பாலஸ்தீனத்தை தனி நாடாக அங்கீகரிப்பதற்கு இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு கண்டனம் தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

ல்
ுக்
ல்
ன

# பிலிப்பைன்ஸில் அரசின் ஊழலை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(மணிலா)

போலி நிவாரணத் திட்டங்களுக்கு பில்லியன் கணக்கான டொலர்கள் செலவிடப்பட்டதாகக் கூறப்படுவதால் அரசாங்க ஊழலுக்கு எதிராக கடந்த ஞாயிற்றுக்கிழமை பல்லாயிரக்கணக்கான பிலிப்பைன்ஸ் மக்கள் வீதிகளில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மணிலா மற்றும் பிற நகரங்களில் மாணவர்கள், தேவாலய குழுக்கள், பிரபலங்கள் மற்றும் பல்வேறு அரசியல் முகாம்களைச் சேர்ந்த குடிமக்கள் வீதிகளில் ஆர்ப்பாட்டங்களை நடத்தியுள்ளனர்.

இந்தப் போராட்டங்களின்போது 20 சிறுவர்கள் உட்பட 72 பேரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர். அத்துடன் ஆர்ப்பாட்டத்தில் 39 பாதுகாப்பு அதிகாரிகள் காயமடைந்துள்ளனர். மேலும் தடுப்பு வேலியாகப் பயன்படுத்தப்பட்ட ஒரு ட்ரெய்லர் வாகனம் தீக்கிரையாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சட்டம் இயற்றுபவர்கள் மற்றும் அதிகாரிகள் ஒப்பந்தங்களுக்கு ஈடாக பெரும் இலஞ்சம் வாங்கியமை உட்பட பல்வேறு விடயங்கள் இந்தப் போராட்டங்களுக்கு காரணமாக கூறப்படுகின்றன.

அதேநேரம், நாட்டை வெள்ளத்திலிருந்து பாதுகாக்கும் நோக்கில் முக்கியமான திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை.

வெள்ளக்கட்டுப்பாட்டுத் திட்டங்களில் ஏற்பட்ட ஊழலால் கடந்த இரண்டு வருடங்களில் நாட்டின் பொருளாதாரம் £1.48 பில்லியன் வரை இழந்திருக்கலாம் என்று பிலிப்பைன்ஸ் அரசாங்கத்தின் மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. கிரீன்பீஸ் அமைப்பு, 2023ஆம் ஆண்டில் காலநிலை தொடர்பான திட்டங்களிலிருந்து £13 பில்லியனுக்கும் அதிகமான தொகை பறிக்கப்பட்டதாக மதிப்பிட்டுள்ளது.

"எங்கள் நோக்கம் நமது ஜனநாயகத்தை சீர்குலைப்பது அல்ல. ஆனால், வலுப்படுத்துவது" என்று பிலிப்பைன்ஸின் கத்தோலிக்க ஆயர்கள் பேரவையின் தலைவர் கார்டினல் பாப்லோ விர்ஜிலியோ டேவிட் ஒரு அறிக்கையில் கூறியுள்ளார். (நி)

# ...ம, பரிசு அல்ல" ...ர் வலியுறுத்து



ஹமாஸ் அமைப்பை இலக்காகக் கொண்டு, காசா மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதலில், இதுவரை 63,000இற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதில் குழந்தைகள், பெண்கள் மற்றும் ஹமாஸ் அமைப்பினரும் அடங்குவர்.

உணவு மற்றும் இருப்பிடம் இல்லாமல் தவிக்கும் பாலஸ்தீனியர்கள், பட்டினியாலும் நோய்த்தொற்றுகளாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஒரு பாலஸ்தீன நாட்டை அங்கீகரிக்க மறுப்பது பயங்கரவாதத்திற்குப் பரிசளிப்பது போன்றது என்றும், இரு நாடுகள் இல்லாமல் மத்திய கிழக்கில் அமைதி சாத்தியமில்லை என்றும் குறிப்பிட்டார். (நி)

...டுகள்"
...ஸ்ரேல்
...ரெண்டு
...தந்திர
...ங்கள்
...நக்குள்
...ம் வாழ
...டார்.
... ஐ.நா.
...களும்
...கராகக்
...ம் அவர்

# பாகிஸ்தான் விமானப்படையின் குண்டுவீச்சில் 30 பேர் உயிரிழப்பு

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் கைபர் பக்துங்க்வா மாகாணத்தில் உள்ள கிராமம் ஒன்றில், விமானப்படை வெடிகுண்டுகளை வீசியதில், பெண்கள், குழந்தைகள் உட்பட 30 பேர் கொல்லப்பட்டனர் பலர் காயமடைந்தனர்.

பாகிஸ்தான், பயங்கரவாத செயல்களுக்கும், பயங்கரவாதிகளுக்கும் ஆதரவாக இருப்பதாக இந்தியா தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறது.

அப்படி பாகிஸ்தான் அரசும், இராணுவமும், ஐ.எஸ்.ஐ. எனப்படும் உளவு அமைப்பும் ஆதரவு தெரிவித்த பயங்கரவாதிகள், அந்நாட்டிற்கு எதிராகவே சில சமயம் செயற்பட்டு வருகின்றனர்.

இந்தப் பயங்கரவாத அமைப்புகள் பாதுகாப்புப் படையினர், பொதுமக்கள் மீது அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த அமைப்புகளை ஒழிக்கும் நடவடிக்கையில் பாகிஸ்தான், இராணுவம் ஈடுபட்டு வருகிறது.

இந்நிலையில், பாகிஸ்தானின் அண்டை நாடான ஆப்கானிஸ்தான் எல்லையை ஒட்டியுள்ள பகுதிகளில், பயங்கரவாத அமைப்புகள் பல இயங்கி வருகின்றன.

இந்நிலையில், ஆப்கான் எல்லையை ஒட்டிய கைபர் பக்துங்க்வா மாகாணத்தின் திராஹ் பள்ளத்தாக்கில் உள்ள மாத்ரே தாரா கிராமத்தில் பாகிஸ்தான், விமானப்படை நேற்று முன்தினம் அதிகாலை 2:00 மணியளவில் குண்டு வீசியது. ஜே.எப்.-17 போர் விமானங்களிலிருந்து எட்டு வெடிகுண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தியது.

இதில் பெண்கள், குழந்தைகள் உட்பட 30 பேர் உயிரிழந்தனர்.

மேலும் பலர் படுகாயமடைந்துள்ளனர்.





அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

இதனால், பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என அஞ்சப்படுகிறது.

தெஹ்ரீக் - இ - தலிபான் பாகிஸ்தான் என்ற பயங்கரவாத அமைப்பினரின் மறைவிடங்களை குறிவைத்து, விமானப்படை தாக்குதல் நடத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தியாக தீபம் திலீபனின் நினைவு தினம் வவுனியாவில் அனுஷ்டிப்பு



(வவுனியா)

தியாக தீபம் திலீபனின் 38ஆவது ஆண்டு நினைவு தினம் வவுனியாவில் உள்ள வாடிவீட்டில் இடம் பெற்றிருந்தது.

இதன்போது ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் அஞ்சலியும் செலுத்தப்பட்டிருந்தது.

அத்துடன் மாணவர்களிற்கான வினாவிடை மற்றும் நடன போட்டிகளும் இடம்பெற்றிருந்ததுடன் வெற்றி பெற்றவர்களிற்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டிருந்தது.

இவ் அஞ்சலி நிகழ்வில் கரைச்சி பிரதேச சபை தவிசாளர் வேழமாலிகிதன்; யாழ். மாநாகர முன்னாள் மேயரும் சட்டத்தரணியுமான மணிவண்ணன், யாழ். மாவட்ட போராளிகள் நலன்புரிச்சங்க தலைவர் ஈஸ்வரன் மற்றும் போராளிகள் நலன்புரிச்சங்க முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் அரசியல் பிரமுகர்கள், முன்னாள் போராளிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (8-250)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு:1998- இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி-பா-37 1/2
10இல்சூரிசெவ்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: A/L, Business (own)
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16090

பிறப்பு:1983-இந்து
நட்சத்திரம்:மிருகசீரிடம்
உயரம்:57"
தகைமை/தொழில்-IT Diploma, Business
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16091

பிறப்பு:1995- இந்து
நட்சத்திரம்: அனுசம்
12இல்செவ்
உயரம்:5'1"
தகைமை/தொழில்:BSc, MSc, Lecturer
எதிர்பார்ப்பு:படித்த உத்தியோகம்
தொ.இ: B/16092

பிறப்பு: 1992- இந்து
நட்சத்திரம்:விசாகம்
கி-பா- 43 1/4
உயரம்:5'5"
தகைமை/தொழில்: NCAT,Field Officer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16094

பிறப்பு: 1993- இந்து
நட்சத்திரம்:அச்சுவினி
கி-பா- 48
உயரம்:5'8"
தகைமை/தொழில்: IT,Master Degree, Engineer(கனடா)
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16095

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி-பா-28
உயரம்: 5'
தகைமை/தொழில்: Bsc,Software Engineer
எதிர்பார்ப்பு: Doctor, Engineer, IT
தொ.இ: G/15601

பிறப்பு-1995-RC
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BFA, Teacher
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15604

பிறப்பு-1991-RC
நட்சத்திரம்-சித்திரை
உயரம்-5'4"
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: அரச தனியார் உத்தியோகம்
தொ.இ: G/15606

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
கி.பா - 24
உயரம்: 5'5"
தகைமை/தொழில் -BSc,Software Engineer
எதிர்பார்ப்பு: Doctor, Engineer
தொ.இ: G/15612

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்:உத்தரட்டாதி
கி.பா -16
உயரம்: 5'6"
தகைமை/தொழில் -A/L
எதிர்பார்ப்பு: உத்தியோகம்,வெளிநாடு
தொ.இ: G/15618

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


## இன்று ஒரு தகவல் 450

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# பணமும் பையனும்!

அப்பா ஒரு ஐநூறு ரூபா பணம் அவசரமாகத் தேவைப்படுகிறது என்றான் பையன். "எதுக்குடா?!" என்று கேட்டார் அப்பா.

"என் நண்பர்கள்கூட சேர்ந்து பிக்னிக் போகப் போகிறேன்!" என்றான் பையன். "இப்ப எதுக்குடா அதெல்லாம்!" என்றார் அப்பா.

உடனே பையனுக்கு கோபம் வந்துவிட்டது. "மாதம் ஐயாயிரம் சம்பாதிக்கின்றேன்! உங்களுக்கு நான் ஒரே பையன்! ஒரு 500 ரூபா கொடுப்பதற்கு இவ்வளவு கணக்குப் பார்க்கிறீர்களே!" என்று சொல்லிவிட்டு வேகமாக வெளியிலே போய் விட்டான். இது வீட்டுக்கு வீடு நடக்கின்ற ஒரு விடயம் இதற்கு என்ன காரணம்? பணத்தின் மதிப்பு பையனுக்குத் தெரியவில்லை என்று அர்த்தம். பிள்ளைகளுக்கு பழக்கவழக்கத்தை சொல்லிக் கொடுக்கிறது மட்டும் முக்கியமில்லை பணத்தை கையாள்வது எப்படி என்பதையும் சின்ன வயதிலேயே சொல்லிக் கொடுக்க வேண்டும். அப்படி நாம் செய்வதில்லை. அதனாலேதான் பெரியவனான பிறகு இப்படி கேட்டுவிட்டுப் போகிறான்! வரவு செலவு என்றால் என்ன என்று தெரியாமலே வளர்ந்துவிடுபவர்கள் தான் அதிகம். அதனாலே பிற்காலத்திலே ரொம்ப சங்கடப்பட வேண்டியிருக்கும். நாமெல்லாம் நம் பிள்ளைகளுக்குப் பழக்க வழக்கத்தோடு பண விடயத்தையும் கற்றுக் கொடுக்க வேண்டும். சரி! அதை எப்படி கற்றுக்கொடுப்பது? அதற்கு நிபுணர்கள் சில வழிமுறைகளைச் சொல்கிறார்கள்!

பிள்ளைகளுக்கு நீங்கள் நினைக்கும் போதெல்லாம் பணம் கொடுப்பதற்குப் பதிலாக ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட தொகையை கொடுத்து விடுங்கள்!

"இந்தாப்பா. 100 ரூபா, இது உனக்கு இந்த மாத செலவுக்கு" என்று சொல்லிவிடுங்கள். ரொம்பச் சின்ன பிள்ளையா இருந்தால் ஒரு 10 ரூபா அல்லது 20 ரூபா நிலைமைக்குத் தகுந்த மாதிரி கொடுங்கள் அதை அவர்களே வைத்து செலவு செய்யட்டும். சில சமயம் அவர்கள் அதை தொலைத்து விட்டாலும் கண்டுக்காதீர்கள் அவர்களே அவஸ்தைப் படட்டும். அவசிய செலவு எது அநாவசிய செலவு எது, பணம் தொலைந்துவிட்டால் எவ்வளவு அவஸ்தை என்பதையெல்லாம் அவர்களே புரிந்து கொள்ளட்டும்!

ரொம்ப சின்ன பிள்ளையாக இருந்தால் வாரத்திற்கு ஒரு தடவை 1 ரூபா அல்லது 2 ரூபா கொடுத்து செலவு செய்யச் சொல்லுங்கள், அவர்களுக்கெல்லாம் ஒரு மாதத்துக்கு மொத்தமாக கொடுத்தால் கஷ்டமாக இருக்கும். வேலை செய்து சம்பாதிப்பதோடு Value வை அவர்கள் புரிகின்ற மாதிரி செய்ய வேண்டும். வீட்டுக்குள்ளேயே அவர்களோடு கடமைகள் போக அதிகப் படியாக ஏதாவது வேலை செய்தால் அதற்கு என்று ஏதாவது கொடுக்கலாம்! பெரிய பையனாக இருந்தால். படிப்பு நேரம் போக Part time வேலை செய்ய ஏதாவது சந்தர்ப்பம் இருந்தால் தாராளமாக செய்யட்டும் அதைத் தடுக்க வேண்டாம்

சேமிக்கின்ற பழக்கத்தையும் சின்ன வயதிலேயே சொல்லிக் கொடுக்க வேண்டும்

சின்னப்பிள்ளை எப்படி என்றால். அவர்களுக்கு அந்தந்த நேரத்து சந்தோஷம்தான் முக்கியமாகத் தெரியும்! நாளைய சந்தோஷம் என்பதைப் பற்றி அவர்கள் யோசிப்பதில்லை! ஒரு எட்டு வயது பையனுக்கு எதிர்காலம் என்பது அடுத்த மாதமே தவிர அடுத்த வருடம் இல்லை!

புத்திசாலித்தனமாக செலவு செய்வது எப்படி என்பதையும் அவர்களுக்கு காட்டுங்கள். அதிக விலை கொடுத்து பொருளை வாங்குவதைவிட குறைந்த விலையிலே இரண்டு தரமான பொருட்கள்வாங்கலாம் என்பதை புரிய வையுங்கள். குடும்பச் செலவை இளைஞர்களும் உணர்கின்ற மாதிரி செய்ய வேண்டும். வசதியுள்ள ஒரு வீட்டுப் பையன் குடும்ப ஸ்கூட்டரை எடுத்துக்கொண்டு வெளியே கிளம்பினான், அவனையே பெட்ரோல் போட்டுக்கச் சொல்லுங்கள்.

எல்லாத்தையும் விட உங்கள் குழந்தைக்கு நீங்கள் ஒரு உதாரணமாக இருங்கள். அப்பா அம்மாவைப் பார்த்துத்தான் பிள்ளைகள் கற்றுக் கொள்ளும்! பிள்ளைகளிடம் பாசமாக இருக்க வேண்டியது தான் அதற்காக பணம் கொடுத்துத்தான் அதைக் காட்டிக்க வேண்டும் என்று நினைக்கக்கூடாது. ஆசையாக ஒரு வார்த்தை பேசினால்அதுவே போதும்

ஒரு அப்பா தன்னுடைய பையனுக்கு பணத்தோடு Value வை புரிய வைக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்காக ஒரு plan செய்து அவனை அழைத்துக்கொண்டுப் புறப்பட்டார். புறப்படுவதற்கு முதல் பையனிடம் பத்து ரூபாயை கொடுத்து பத்திரமாக சட்டைப் பையிலே வைக்க சொன்னார். ரொம்ப கவனமாக இருக்க வேண்டும் என்று அட்வைஸ் செய்தார். கூட்டம் அதிகமாக இருந்த ஒரு டவுன் பஸ்ஸிலே இரண்டு பேரும் ஏறினார்கள். பஸ் புறப்பட்டது. அந்த அப்பா நைஸாக பையன் பாக்கெட்ல இருந்த பத்து ருபா பணத்தை திருடி தன்னுடைய பாக்கெட்லே வைத்துக்கொண்டார்.

பஸ்ஸை விட்டு இறங்கினதும் பையனை பார்த்து, "பத்து ரூபா கொடுத்தேனே. அதை கொடு! என்றார். பையன் பாக்கெட்டை தடவிப் பார்த்தான். பணம் இல்லை! முழிக்க ஆரம்பித்தான் பரிதாபமாக! இப்ப அந்த அப்பா பையனை பார்த்து இதோ பாருப்பா. எப்பவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் அதை உனக்கு கற்றுக் கொடுப்பதற்குத்தான் இப்படி உன்னை அழைத்துக்கொண்டு வந்தேன். பரவாயில்லை! இனிமேலாவது ஜாக்கிரதையாக இருக்க கற்றுக்கொள். உன்னிடம் இருந்த பணம் எங்கேயும் போகவில்லை, இதோ என்னிடம்தான் இருக்கு என்று சொல்லிக்கொண்டே தன் சைடு பாக்கெட்லே கையை விட்டார்! பாக்கெட்டையே காணவில்லை. அதை அப்படியே எவனோ வெட்டி எடுத்துக்கொண்டுப் போய்விட்டான் சார். இப்போது அந்த அப்பா பையனை பார்த்து முழிக்க ஆரம்பித்தார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செப்ரெம்பர் 17 – உலக நுண்ணங்கி தினம் : அவையின்றேல் நாமுமில்லை நம்மதுவெதுவுமில்லை



**பேராசிரியர் கு.மிகுந்தன்**
விவசாய உயிரியல்துறை,விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உலகளாவிய ரீதியில் கொண்டாடப்படும் தினங்களுள் உலக நுண்ணங்கி தினம் செப்ரெம்பர் மாதம் 17ஆம் திகதியாகும். 2017 ஆம் திகதியளவில் உலக நுண்ணங்கி தினத்தை அறிவிக்கப்பட்டு கொண்டாடப்பட்டாலும் நுண்ணங்கிகளுக்கான சங்கங்களின் ஐரோப்பிய சம்மேளனம் (Federation of European Microbiological Societies) 2022 இல் இருந்து நுண்ணங்கிகளின் முக்கியத்துவத்தை உலக மக்கள் உணரவைத்திருக்கின்றது. இருப்பினும் நாமனைவரும் அவசியம் கொண்டாடவேண்டிய இத்தினம் இம்முறை அமைதியாகவே கடந்திருக்கின்றது. இத்தினத்தைப் பற்றிய அறிவு மக்களனைவருக்கும் அவசியம் இருக்க வேண்டும். நுண்ணங்கிகளினாலுள்ள நன்மைகள் அதனால் எற்படும் தீமைகள் அனைத்தையும் நாம் அனைவரும் தெளிவாக அறிந்திருக்க வேண்டும். இதனால் பல இழப்புக்களை நாம் தவிர்த்துக் கொள்ளலாம்.

1683ஆம் ஆண்டு இதே தினத்தில் நுண்ணங்கியினை முதன் முதலில் கண்டுபிடித்த அன்ரனி வான் லீயுவன்கூக் (Antonie van Leeuwenhoek) அவர்கள் றோயல் சமூகத்திற்கு எழுதிய முதற்கடிதமாகும். அதனை மையமாக வைத்து நுண்ணங்கி பற்றிய அறிவினை உலக மக்கள் அனைவருக்கும் தெரிய அறிய இந்த தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. ஏனெனில் எவ்வாறு நீரின்றி இவ்வுலகேது என அறிகிறோமோ அதுபோல நுண்ணங்கிகளின்றி இவ்வுல இயக்கமேது குறிப்பாக நாமும் நம்மதுவுமேது.

நுண்ணங்கிகள் எமது வாழ்க்கையில் எமது உணவில் எமக்கான மருந்துதயாரிப்பில் பலவிதங்களில் உதவுகின்றன. நுண்ணங்கிகளில் நன்மை மற்றும் தீமை தருவன இருக்கின்றன. எமக்குத் தீமை தருவன என்றாலும் சூழலில் உள்ள சேதன கழிவுகளை பிரிந்தழியச்செய்து உக்கி மண்ணோடு கலக்கும் பாரிய பொறுப்பை அவை செய்கின்றன. நுண்ணங்கிகளின்றேல் எமது இயக்கமும் தடைப்பட்டு விடும். எமதுடலில் உள்ள நுண்ணங்கிகளை கணக்கிலிட முடியாது. எமது சமிபாட்டுத்தொகுதியினுள்ளிருக்கும் நுண்ணங்கியகத்தில் (Gut microbiome) பலவகையான அதீத எண்ணிக்கையான நன்மைதரும் நுண்ணங்கிகள் காணப்படுகின்றன. இவை எமது சமிபாட்டுக்கும் அகத்துறுஞ்சலுக்கும் உதவுகின்றன. இவ்வாறான நன்மைதரும் நுண்ணங்கிகளை பேணுவதற்காகவே பழஞ்சோற்றுத் தண்ணீர், யோகட் மற்றும் தயிர் என்பனவற்றை உணவில் சேர்த்துக் கொள்வர். இவற்றினால் எமது உடலில் புத்துயிர்ப்பு உருவாகும். இவற்றை ஆரம்ப உயிர்ப்புசக்தி (Probiotic) என்றும் இவற்றினால் பெறப்படும் ஊட்டச்சத்தினை முன்பான உயிர்ப்புசக்தி (Prebiotic) எனவும் அழைக்கப்படுகின்றது. இவற்றின் பயன்பாடு எந்தவித விலங்கினத்தின் சமிபாட்டுக்கு அவசியமானதாகும்.

நுண்ணங்கிகள் மண்ணில் அதிக எண்ணிக்கையில் காணப்படுகின்றன. இவற்றின் தொழிற்பாட்டினால் காபன், நைதரசன், பொசுபரசு மற்றும் பொட்டாசியம் ஆகியவற்றின் சுழற்சி மேம்படுத்தப்படுகின்றன. மண்ணில் தழைச்சத்தை நிலைநாட்டுவதற்கு பயிர்களின் வேர்களில் ஒன்றிய வாழ்வின் மூலம் உருவாகும் வேர்முடிச்சுக்கள் றைசோபியம் என்னும் மண்வாழ் தனித்துவமான பக்ரீறியாவின் அனுசரணையுடன் வளிமண்டல நைதரசனை




மண்ணில் குறிப்பாக வேர்முடிச்சுக்களில் பதிவைக்கின்றன. அதே போல ஹந்தான எனுமிடத்தில் அமைந்துள்ள தேசிய அடிப்படை கற்கைகளுக்கான நிறுவனம் (National Institute of Fundamental Studies) புதுமையான கண்டுபிடிப்பாக உயிர்ப்படை (Biofilm) உயிர்ப்பசளைகள் நுண்ணங்கிகளின் பெருவாழ்வின் மூலம் பயிர்களுக்கு அதிக ஊட்டச்சத்தும் நோயெதிர்ப்பு சக்தியும் வழங்கப்படுகின்றது.

தேயிலைக்கு இவ்வாறான உயிர்ப்படை பயன்படுத்தப்பட்டு அதனது வேரில் பூஞ்சணம் மற்றும் பக்ரீறியாக்களின் பிணைப்பால் உயிர்ப்படை தோற்றம் பெற்று அதன் மூலமாக வேர்களினால் இலகுவில் ஊட்டச்சத்துக்கள் அகத்துறுஞ்சப்பட்டதனால் அதீத விளைச்சலைக் காண்பித்திருக்கின்றது. அதனை வேறுபயிர்களுக்கும் பயன்படுத்த பரீட்சித்துப் பார்க்கப்படுகின்றது.

நன்மைதரும் நுண்ணங்கிகள் வரிசையில் பயிர்களில் சேதத்தை உண்டுபண்ணும் பூச்சி. சிற்றுண்ணி பீடைகளை கட்டுப்படுத்த உயிர்க்கொல்லிகளாக பயன்படுத்தப் படுகின்றன. இவற்றுள் நுண்ணங்கிகளின் வகைகளான பூஞ்சணங்கள், பக்ரீறியாக்கள், வைரசுக்கள் புரோடோசோவன்கள் மற்றும் நெமற்றோட்டுக்கள் உயிரியல் காரணிகளாக பயன்படுத்தப்படுகின்றன.

பூஞ்சணங்களில் மண் வாழ் சேதன வளரிகளான மெற்றாரைசியம் (புழுக்களை வண்டுகளை பனிப்பூச்சியை), போவேரியா பசியானா (புழுக்களை வண்டுகளை கட்டுப்படுத்த), பேசிலோமைசிசு (கறையான்களை கட்டுப்படுத்த), நியோசைஜிற்றசு புளோறிடானா (சிற்றுண்ணியை பனிப்பூச்சியை), லெக்கானிசிலியம் லெக்கானி(சாறு உறுஞ்சும் பூச்சிகளை), ஹிர்சூட்டெல்லா தொம்சோனி(தென்னை சிற்றுண்ணியை கட்டுப்படுத்த), நெமூரியா றிலேயி(குறிப்பாக புழுக்களை ) என்பன இவற்றுள் அடங்கும்.

தினந்தினம் புதுமைகளை காணும் இவ்வுலகில் நுண்ணங்கிகளின் ஆளுமை என்பது என்றென்றும் தவிர்க்க முடியாதது.

பயன்படுத்தப்பட்ட பிளாஸ்ரிக்குகளை வெற்று பிளாஸ்ரிக் போத்தல்களை உக்கவைப்பதில் ஒரு வகை பூஞ்சணம் இனங்காணப்பட்டுள்ளது. இயற்கையிலேயே இவ்வாறான நுண்ணங்கிகள் இருப்பதால் தான் உலகம் கழிவுகளின்றி உய்து கொண்டிருக்கின்றது.

கழிவுகளை உக்கவைத்து அவற்றை பசளைகளாக்கி தாவரங்களுக்கு உணவளிக்கின்றன. உணவளிக்கும் தாவரங்களுக்கு ஊட்டச்சத்து கொடுக்கும் ஓரங்கி என்றால் நுண்ணங்கிகள் தான். இவை தவிர நாம் உணவாக உட்கொள்ளும் காளான்கள் ஒரு வகை பூஞ்சணமே. சேதன கழிவுகளை உக்கவைக்கும் சிறந்த நுண்ணங்கி கூட்டமாக (Effective microorganisms) ஒளித்தொகுப்புச்செய்யும் பக்ரீறியா (Photosynthetic), லக்ரிக் அமில பக்ரீறியா (Lactic acid) மற்றும் மதுவம் (Yeast) அனைத்தும் வெவ்வேறு அளவுகளில் கலந்து பயன்படுத்தப்படுகின்றன.

நுண்ணங்கிகள் மனிதனுக்கான மற்றும் வளர்ப்பு விலங்குகளுக்கான உணவு தயாரிப்பில் மருந்து தயாரிப்பில் கழிவு முகாமைத்துவத்தில் மாசுக்களை அகற்றுவதில் இன்னும் பலவகையான பண்டங்கள் தயாரிப்பில் முழுமையாக பங்கு பற்றுகின்றன.

இவற்றின் பங்களிப்பு இன்றேல் தற்போதைய உணவுகள் உற்பத்தியாகமாட்டா. நுண்ணங்கிகளினடிப்படையிலேயே பலவிதமான தொழில்நுட்பங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இன்னும் அவற்றின் முழு செயற்பாட்டினையும் கணிக்க முடியவில்லை. நுண்ணங்கிகளின் உருவாக்கம் அவற்றின் பெருக்கம் அனைத்திலும் சூழல் சார் காரணிகளும் தற்போது அங்கம் வகிக்கின்றன.

இவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துணரச் செய்வதற்காக இந்த தினத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. எமது நாட்டில் இதற்கென இலங்கை நுண்ணங்கியலாளர் சங்கம் (Sri Lankan Society for Microbiology) உருவாக்கப்பட்டு அதனது செயற்பாடுகள் நாடு முழுவதும் எடுத்துச் செல்லப்பட்டிருக்கின்றது. இதனது கிளைகளாக யாழ்ப்பாணத்திலும் கொழும்பிலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டாலும் கண்டியிலும் புதிய கிளைகள் உருவாவதற்காக கால்கோலும் நடைபெற்றுள்ளது.

நுண்ணங்கிகளின் பெறுமதியை நாமும் உணர்ந்து அதன் பயன்பாடுகளையும் அவற்றினால் உருவாக்கப்படும் நோய்கள் பற்றிய அறிவையும் எம்மவர்களுக்கு எடுத்துரைப்போம். மனித குலம் வாழ நுண்ணங்கிகள் எவ்வளவு அவசியமோ அதே போல எமது தவறான நேர்த்தியற்ற வாழ்க்கை முறையால் மனிதகுலம் நுண்ணங்கி தொற்றினாலும் அழிகின்றதனையும் எடுத்துச் சொல்வோம். அண்மையில் வந்த கொவிட் வைரஸ், டெங்கு வைரஸ். மலேரியா கிருமி இன்னும் பலப்பல. அனைத்திற்கும் வருமுன் காப்போம் என்னும் தாரக மந்திரத்தை நாம் என்றும் மறந்துவிடலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 871





குளிர் சுரத்துக்குப் பிறகு பிரயாணத்துக்கு வேண்டிய உடல் பலம் வரவில்லை என்றும், விரைவில் அழைத்துக் கொண்டு வர ஏற்பாடு செய்வதாகவும் கூறினேன். ஆனால் அவனை இப்போது இங்கு அழைத்து வருவதால் இராஜ்யத்தில் ஏற்படக் கூடிய குழப்பத்தைப் பற்றியும் இலேசாகச் சொன்னேன். இதைக் கேட்டதும் அவருடைய மனப்போக்கு வேறு விதமாகத் திரும்பி விட்டது. 'இந்த இராஜ்யந்தான் என் பிள்ளைகளுக்கு யமனாக ஏற்பட்டிருக்கிறது. இராஜ்யம் அவர்களுக்கு இல்லையென்று தீர்ந்தால் என் புதல்வர்கள் உயிரோடு சுகமாயிருப்பார்கள். அதற்காகத்தான் அவர்களை இங்கு அழைத்து வர இவ்வளவு அவசரப்படுகிறேன்!' என்றார். திடீரென்று இன்னொரு பீதி அவர் மனத்தில் குடிகொண்டது.

உக்கிரமான புயல் காற்றினால் நேற்றிரவு அரண்மனையெல்லாம் கிடுகிடுத்துப் போயிற்று. ஒரு தடவை பேரிடி இடித்து ஓய்ந்ததும் என் தந்தை வெறி கொண்டு விட்டார். 'மகளே! அருள்மொழியை இனி நான் பார்க்கப் போவதில்லை. கீழைக் கடலில் தோன்றும் புயல் காற்றுகளையும் சுழிக் காற்றுகளையும் பற்றி எனக்கு நன்றாய்த் தெரியும்.

இன்று அடிக்கும் புயலினால் கடற்கரையில் தென்னை மர உயரம் அலைகள் எழும்பும். உள்நாட்டில் வெகு தூரம் கடல் பொங்கிவந்து மூழ்க அடிக்கும். காவேரிப் பட்டினத்தை அன்று ஒருநாள் கடல் கொண்டது போல் நாகைப் பட்டினத்தையும் கொண்டு போனாலும் போய்விடும். அதிலும் கடற்கரைக்கும் கால்வாய்க்கும் மத்தியில் உள்ள புத்த விஹாரம் ஒரு நாளும் தப்பிப் பிழைக்காது. அந்தப் பழிகாரி கரையர் மகள் கடலில் என் மகனைக் கொண்டு போக முடியவில்லை.

அதற்குப் பதிலாக கரையிலேயே வந்து என் மகனைக் கொல்லப் போகிறாள்! நான் போய் இதோ அவளைத் தடுத்து என் மகனைக் காப்பாற்றப் போகிறேன்' என்று கதறிக் கொண்டு எழுந்திருக்க முயன்றார். அந்த முயற்சியில் தளர்ச்சியுற்றுப் படுக்கையில் விழுந்தார். ஐயா! அப்போது என் தந்தை விம்மி அழுத குரலைக் கேட்டால் கல்லும் மலையும் உருகிவிடும்!" என்றாள் இளையபிராட்டி.

அவளுடைய கண்களில் அப்போது தாரை தாரையாகக் கண்ணிர் வழிந்து கொண்டிருந்தது.

## 26 ஆம் அத்தியாயம்
## வீதியில் குழப்பம்

குந்தவை கண்ணீர் விடுவதைப் பார்த்துவிட்டு, வானதியும் விம்மத் தொடங்கினாள். உலகத்தில் எத்தனையோ இன்ப துன்பங்களைப் பார்த்தவரான அநிருத்தப் பிரம்மராயரின் இரும்பு நெஞ்சமும் இளகியது.

"தாயே! சக்கரவர்த்தி இப்போது படும் கஷ்டங்களுக்கெல்லாம் காரணமானவன் இந்தப் பாவிதான். என்ன பிராயச்சித்தம் செய்து அந்தப் பாவத்தைத் தீர்த்துக் கொள்ளப் போகிறேனோ தெரியவில்லை!" என்றார்.


"ஐயா! தங்களுக்குத் தெரியாதது ஒன்றுமில்லை. ஆயினும் எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன். அந்தக் கரையர் மகள் இறந்து விடவில்லை. உயிரோடிருக்கிறாள் என்பதைத் தந்தைக்குத் தெரிவித்துவிட்டால் அவருடைய துன்பம் தீர்ந்து மன அமைதி ஏற்பட்டுவிடும்.

(தொடரும்....)



# சிறுவர் அரங்கம்

## புதியதாக வந்த நட்பும், உதவியும்



(நேற்றைய தொடர்ச்சி)

நாளை அந்த மாட்டை அழைத்து வருகிறேன் அது குழியில் விழுந்தவுடன் நீங்கள் அடித்து சாப்பிட்டு விட்டு மேலே வர இந்த மரக்கிளையை போடுகிறேன் அதில் ஏறி வந்து விடுங்கள், நான் இந்த மரக்கிளையில் இறங்கி உள்ளே சென்று மிச்சத்தை சாப்பிட்டுவிட்டு இதே மரக்கிளை வழியாக மேலே வந்து விடுகிறேன் என்று சொல்லியது. புலியும் அந்த மரக் கிளை வழியாக குழியில் போய் படுத்துக் கொண்டது. நரி மரக் கிளையை வெளியே எடுத்து விட்டு முதலில் இருந்தது போல் இலை தழைகளால் மூடி விட்டது.

மாடு மறுநாள் வழக்கம்போல விவசாயியும், நாயும், மாடுகளை அழைத்து சென்றனர். அப்படி செல்லும் பொழுது எப்பொழுதும் போல் இல்லாமல் இந்த மாடு மட்டும் ஒதுங்கிப் போவதையும், அதே நேரத்தில் வித்தியாசமாகவும் நடந்து கொள்வதை நாய் கவனித்தது. தன்னுடைய கண்பார்வையை இதன் மீது வைக்க ஆரம்பித்தது. வழக்கம் போல அவைகள் மேயும் இடத்திற்கு சென்றவுடன், இந்த மாடு மட்டும் ஒதுங்கி மறைவதை பார்த்த நாய் மெல்ல அதற்கு தெரியாமல் என்ன செய்கிறது என பார்த்தது, அந்த மாடு மெல்ல ஒதுங்கி மேய்வது போல காண்பித்தது, அப்பொழுது பதுங்கி வந்த நரி இந்த மாட்டை சைகை காட்டி அழைத்து கூட்டி செல்ல ஆரம்பித்தது. நரியுடன் மாடும் செல்ல ஆரம்பித்தது. பின் தொடர்ந்த நாய், நரி ஏதோ சதி செய்து அழைத்து செல்கிறது என்பதை புரிந்து கொண்டது. சிறிது தூரத்தில் ஒரு பெரும் குழி இருப்பது அதற்கு ஞாபகம் வந்தது. உடனே ஒரு முடிவு எடுத்து நரியின் மீது பாய்ந்தது, திடீரென்று பாய்ந்த நாயை கண்டவுடன் தலை தெறிக்க ஓட ஆரம்பிக்க நாய் வேண்டுமென்றே அந்த குழியை நோக்கியே விரட்ட ஆரம்பித்தது. நாயிற்கு பயந்து ஓடிக் கொண்டிருந்த நரிக்கு உயிர் பயத்தில் குழியை மறந்து விட்டது. அந்த குழியினுள் காலை வைக்க உள்ளே விழுந்தது.

ஒரே அடியில் கொன்றுவிட வேண்டும் என்று காத்திருந்த புலி ஓங்கி அடிக்க பரிதாபமாய் உயிரை விட்டது நரி. அடித்த பின்தான் கவனித்தது புலி, அய்யையோ நரியை கொன்று விட்டோமே என மேலே பார்க்க அங்கே நாயும், பக்கத்தில் நரியை நம்பி வந்த மாடும் நின்று கொண்டிருந்தன. பார்த்து என்ன செய்ய? மேலே வர, மரக் கிளையை போட்டால் தானே வர முடியும். மேலே வர முடியாமல் சுற்றி சுற்றி வர ஆரம்பித்தது.

நாய், மாட்டிடம் பார்த்தாயா, புதிதாக ஒருவன் வந்து உதவி செய்கிறேன் என்று சொன்னால் அதில் உள்ள ஆபத்துக்களை எண்ணிப்பார்க்க வேண்டும் என்றது. மாடும் உண்மையை உணர்ந்து நாயிடம் மன்னிப்பு கேட்டது. (முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிமன்றம் சந்திக்க வேண்டிய இன்னொரு நீதிமன்றம் மக்கள் கருத்து. ~ கார்ல் மார்க்ஸ்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எல்லாவற்றையும் எதிர்ப்பதென்றால்...

சரிக்குச் சரியும் பிழைக்குப் பிழையும் இடுவதுதான் நடுவுநிலையின் பண்பாகும். அதனாலன்றோ **கல்வி அழகே அழகு** என்கிறது நாலடியார்.

எனினும் தமிழ் மக்களாகிய நாம் எல்லாவற்றையும் எதிர்க்கும் மனநிலைக்கு ஆளாகிவிட்டோமோ என்று எண்ணுமளவுக்கு நிலைமை உள்ளது.

அதாவது எந்த அபிவிருத்தித் திட்டம் வந்தாலும் அதற்கு ஏதோவொரு காரணத்தைக் கூறி அதை எதிர்ப்பதென்பது எங்கள் இனத்தை படுபாதாளத்தில் தள்ளிவிடும் என்பதை நாம் ஒருபோதும் மறந்துவிடக்கூடாது.

தவிர, எல்லாவற்றையும் எதிர்ப்பதென்பதற்குள் சிலரின் சுயநலம் புரையோடியுள்ளதென்பதையும் நாம் சிந்திக்காமல் இருந்துவிடக்கூடாது.

ஆம், இப்போது மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமையப் பெறுவதற்கு சிலர் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு எதிர்ப்புத் தெரிவிப்பதென்பது சுலபமானது.

அதேநேரம் எங்கள் தமிழ் மாணவர்கள் தேசிய மற்றும் சர்வதேச, கிரிக்கெட் அணிகளில் இடம்பெற முடியவில்லை என்ற கவலையையும் நாம் வெளியிட்டிருந்ததை மறந்துவிடக்கூடாது.

மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமையப் போகிறது என்ற தகவல் இன்று நேற்று வெளிவந்ததல்ல. அது ஏலவே தீர்மானிக்கப்பட்ட விடயம்.

அப்படியானால், அதுபற்றி நாம் முன்னமே கூடி ஆராய்ந்திருக்க வேண்டும்.

இதைவிடுத்து செயற்றிட்டம் நடைமுறைக்கு வரும்போது அதற்கு எதிர்ப்புத் தெரிவிப்பது- அதை விமர்சிப்பதென்பது ஆரோக்கியமான விடயமல்ல.

ஒரு செயற்றிட்டம் அமுலாகும்போது அதை எதிர்ப்பதென்பது மிலேச்சத்தனமானது.

எனவே எல்லாவற்றையும் எதிர்ப்பதென்பது எங்கள் இனத்துக்கு ஈனமாக அமையுமேயன்றி மற்றும்படி அதனால் எந்தவித பிரயோசனமும் கிடைக்கப் போவதில்லை.

உண்மை. மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் அமைகிறது எனில், அங்கு தமிழ் இளைஞர் யுவதிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்க வேண்டும். மைதானத்தின் சூழலில் தமிழ் முதலீட்டாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதான கோரிக்கைகளும் பேச்சுவார்த்தைகளுமே எங்கள் இனத்துக்கு உதவுவதாக இருக்கும்.

இதைவிடுத்து சர்வதேச கிரிக்கெட் மைதானத்துக்கு அடிக்கல் நாட்டிய பின்னர், அதை எதிர்ப்பதென்பது குறித்த மைதானத்தை தென்பகுதிக்குத் திசை திருப்புகின்ற உள்நோக்கம் கொண்டதாகக்கூட இருக்குமோ என ஊகிப்பதில் தவறில்லை.

ஆக எல்லாவற்றையும் எதிர்ப்பது என்றில்லாமல் எங்கள் ஏழை மக்களின் வாழ்வுக்கு எங்ஙனம் உதவ முடியும் எனச் சிந்தித்துக் கருத்துரைப்பதே உத்தமமாகும்.

# தங்காலையில் பாரியளவு போதைப்பொருட்கள் ஆயுதங்கள் மீட்பு தொடர்பில் அறுவர் கைது

## பொலிஸார் தீவிர விசாரணை

தங்காலை சீனிமோதரப் பகுதியில் பாரியளவு போதைப்பொருள் அடங்கிய மூன்று லொறிகள் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உனகுருவே துசிதவின் இரண்டு மகன்கள் உட்பட அறுவர் நேற்று (23) கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிவிப்பில்,

தங்கல்லே பகுதியில் நேற்றுமுன்தினம் மூன்று லொறிகளில் பொலிஸாரால் ஐஸ் மற்றும் ஹெரோயின் உள்ளிட்ட 705.91 கிலோகிராம் போதைப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டது.

அவற்றில் 284.94 கிலோகிராம் ஹெரோயின் மற்றும் 420.976 கிலோகிராம் ஐஸ் இருப்பதாகவும் போதைப்பொருட்களின் மொத்த மதிப்பு சுமார் 9,888 மில்லியன் ரூபா என மதிப்பிட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் நடத்திய அந்த விசாரணையில், போதைப் பொருள் கையிருப்பு வெளிநாட்டிலிருந்து போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்ட உனகுருவே சாந்த என்ற குற்றவாளிக்கு சொந்தமானது என்பது தெரியவந்தது.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் நேற்று உயிரிழந்த நபர் உனகுருவே சாந்தவின் போதைப்பொருள் வலையமைப்பை நடத்தி வந்த உனகுருவே துசிதா என்று தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பாக உனகுருவே துசிதவின் இரண்டு மகன்கள் போதைப்பொருள் கண்டுபிடிக்கப்பட்ட லொறிகளின் பதிவு செய்யப்பட்ட மூன்று உரிமையாளர்கள் மற்றும் லொறியின் ஓட்டுநர் ஒருவர் என ஆறு பேரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைகளின் பின் தங்காலை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளனர். தங்காலை பொலிஸார், பொலிஸ் போதைப் பொருள் ஒழிப்புப் பணியகத்துடன் இணைந்து, சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

# போதைவஸ்து வர்த்தகத்துடன் அரசியல்வாதிகளுக்கும் தொடர்பு

## விரைவில் வெளியிடுவோம் என்கிறார் நளிந்த

(கொழும்பு)

இலங்கையில் போதைப்பொருள் வலையமைப்புடன் பாதுகாப்புப் படையினர் மற்றும் அரசியல்வாதிகள் கொண்டிருந்த தொடர்புகள் குறித்த சில தகவல்கள் வெளிச்சத்துக்கு வரும் சூழலில், எவரும் அச்சமடைய வேண்டாம் என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பத் மனம்பேரி கைது செய்யப்பட்டதையடுத்து, அவரது வாக்குமூலங்களின் அடிப்படையில் சில ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் தொடர்ந்து விசாரணைகள் நடைபெற்று வருகின்றன.

எனவே மக்கள் நம்பிக்கையுடன் காத்திருக்க வேண்டும். அரசியல் தொடர்புகள் எதிர்காலத்தில் படிப்படியாக வெளிப்படும் என்றார். (ம-7)

# திடீர் வயிறு வீக்கம் குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

திடீர் வயிறு வீக்கம் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்த இளம் குடும்பஸ்த்தர் ஒருவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி மன்னங்கண்டிப் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய இளம் குடும்பஸ்த்தரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பிரஸ்தாப நபருக்கு கடந்த 21ஆம் திகதி திடீரென வயிறு வீக்கம் ஏற்பட்ட நிலையில் கிளிநொச்சி மாவட்டப்பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையிலேயே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் மேற்கொண்டார். (ம-7,104)

# ரயிலுடன் மோதுண்டு காலை இழந்த நபர்

## ஓமந்தையில் சம்பவம்

ஓமந்தையில் ரயிலுடன் மோதுண்ட ஒருவரது இடது கால் துண்டிக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 11.15 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு புறக்கோட்டை நோக்கிப் பயணித்த இரவு தபால் ரயில் வவுனியா ஓமந்தைப் பகுதியில் பயணித்தவேளை குறித்த அசம்பாவிதம் சம்பவித்துள்ளது. (ம-7)

# திலீபனின் நினைவூர்திக்கு முன் வெடி கொளுத்தியவர் கைது

தியாக தீபம் திலீபனின் திருஉருவப்படம் தாங்கிய ஊர்தியானது நேற்று பருத்தித்துறை நகரைச் சென்றடைந்த நிலையில் மதுபோதையில் ஊர்திக்கு முன்பாக வெடியைக் கொளுத்தி வீசிய நபர் பருத்தித்துறை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

தியாக தீபம் திலீபனின் 38ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி முன்னெடுக்கப்படும் "திலீபன் வழியில் வருகிறோம்" என்ற ஊர்தி பவனியானது கடந்த ஒரு வாரகாலமாகத் தமிழர் தாயகப் பகுதிகளில் அஞ்சலிக்காகப் பவனி வரும் நிலையில் நேற்று (23) செவ்வாய்க்கிழமை நண்பகல் அளவில் பருத்தித்துறை நகரை அடைந்தது.


பருத்தித்துறை நகரபிதா வின்சன் டி போல் டக்ளஸ் போல், வர்த்தகர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எனப் பலரும் தியாக தீபம் திலீபனின் திருவுருவப்படத்துக்கு உணர்வுபூர்வமாக மலர்தூவி அஞ்சலி செலுத்தியிருந்தனர்.

இதன்போது பருத்தித்துறை நகரப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் ஊர்தியின் முன்பகுதியில் பெருந்தொகையான பட்டாசுகளைக் கொளுத்திய போது பருத்தித்துறை நகர் முழுவதும் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

குறித்த சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை நகரபிதா உடனடியாகப் பருத்தித்துறை பொலிஸாருக்கு முறைப்பாடு செய்திருந்தார்.

இதையடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த பருத்தித்துறைப் பொலிஸார் மதுபோதையில் காணப்பட்ட குறித்த நபரைக் கைது செய்தனர். (ம-7,60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்

## ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் நாட்டின் வளர்ச்சி

### பகுதி VI

08

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம். தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

1856 இல் குடியியல் ஆணையாளர் எனும் குழு, பரீட்சை ஒன்றினை நடத்தி, அதில் முதற்றரமாகச் சித்தி பெற்றவர்களையே குடியியற் சேவைக்குத் தெரிந்தெடுத்தது. இப்பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாகவும், வயதில் 18 இற்கும் 25 இற்கும் உட்பட்டவர்களாகவும் இருத்தல் வேண்டும் என விதிக்கப்பட்டது.

1870 இல் குடியேற்ற நாட்டுக் காரியாலயம், இங்கிலாந்திலிருந்தும், இலங்கையிலிருந்தும் குடியியற் சேவையில் சேர விரும்புபவர்கள், ஈரிடங்களிலும் நடத்தப்படும் ஒரே போட்டிக்குரிய பரீட்சைக்குத் தோற்ற வேண்டுமென விதித்தது. அத்தீர்மானத்துக்கிணங்க 1870 தொடக்கம் குடியியற் சேவைப் பரீட்சை இலங்கையிலும் நடத்தப்படலாயிற்று.

இங்கிலாந்தில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், சிங்களத்திலும், தமிழிலும் போதிய அறிவு பெற்றிருக்க வேண்டுமெனவும் விதிக்கப்பட்டது. 1880 தொடக்கம் இப்பரீட்சை இங்கிலாந்தில் மாத்திரம் நடத்தப் பெற்றது. வயதுத் தகைமை 22 இற்கும் 24 இற்கும் இடைப்பட்ட தாக்கப்பட்டது.

19 ஆம் நூற்றாண்டின் பெரும் பகுதியில் குடியியற் சேவையாளர் முழுமையாக ஆங்கிலராகவே இருந்தனர். இச்சேவையினுள் முதன் முதல் புகுந்த இலங்கையர் திரு.சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களாவார். ஆங்கிலப் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற அவர், 1875 இல் போட்டிக்குரிய குடியியற் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்தார். ஆங்கிலச் சேவையாளரிலும் பார்க்க அதி திறமைசாலியாக விளங்கியபோதிலும் அவர் பதிவு நாயகம் (Registrar General) எனும் பதவிக்கு மேல் உயர்வடைய ஆட்சியாளர் அனுமதிக்கவில்லை. அவரைத் தொடர்ந்து அச்சேவையினுள் புகுந்த சேர். போல் பீரிஸ், இலங்கைச் சரித்திர ஆராய்ச்சித் துறையில் பல அளப்பரிய பணிகள் புரிந்தார்.

முதலாம் உலகப் போருக்குப் பிற்பட்ட ஆண்டுகளில், இலங்கையர் அதிகமானோர் குடியியற் சேவையில் சேர்ந்தனர். 1921 இல் இலங்கைப் பல்கலைக் கழகக் கல்லூரி திறக்கப்பட்டமையும், 1924 இல் குடியியற் சேவைப் புகுமுகப் பரீட்சைகள் கொழும்பிலும் இலண்டனிலும் நடத்தப்பட்டமையும், இலங்கைப் பட்டதாரிகளுக்குப் பெரும் வாய்ப்பாயமைந்தன. பட்டதாரிகளான இளைஞர்கள் குடியியற் சேவையினுட் புகுவதைத் தம் கல்வியின் உன்னத நோக்கமாகக் கொண்டனர். இவ்விதம் அதனுட் புகுந்த வாலிபர்களும், பொதுவாக அச்சேவையின் உயர் இலட்சியங்களைக் கடைப்பிடித்து, நாட்டின் நிருவாகத்தைத் திறம்பட நடத்தினர்.

#### மாகாண நிர்வாக அலகின் பரிணாமம்

புராதன காலம் முதலே இலங்கையில் பல் வேறு நிர்வாக அலகுகள் வெவ்வேறு மட்டங்களில் செயற்பட்டு வந்துள்ளமைக்கு தக்க சான்றுகள் காணப் படுகின்றன. போர்த்துக் கேயர் இலங்கைக்கு வரும் போது கோட்டை, யாழ்ப்பாணம் மற்றும் கண்டி என மூன்று இராச்சியங்கள் காணப்பட்டன. இவை தவிர வன்னித்தலைவர்களின் கீழ் வன்னிப்பிரதேசம் ஆட்சிசெய்யப்பட்டது.

இவ்விராச்சியங்களுக்கு தனித்துவமான நிர்வாக முறை நிலவியது. அரசர்கள் தங்கள் ஆட்சிப் பரப்பை நிர்வகிக்கவும் தமது வாரிசுகளினதும் விசுவாசிகளினதும் தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய முறையில் நிர்வாகப் பிரிவுகளை ஏற்படுத்தியும் காலத்திற்கு காலம் இப் பிரிவுகளை கூட்டியும் குறைத்துமுள்ளனர்.

போர்த்துக்கேயர் முதன்முறை தொடர்பினை ஏற்படுத்திய கோட்டை இராச்சியத்துக்கு உரித்தான பிரதேசம் திசாவனிகளாகப் பிரிக்கப்பட்டு நிர்வாகம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந் நிர்வாகமுறை மக்களுக்கு பழக்கப்பட்டிருந்ததுடன் அது போர்த்துக்கேயரின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கும் போதுமானதாக இருந்ததால் மரபு ரீதியிலான இந் நிர்வாகமுறை சிறியளவான மாற்றங்களுடன் போர்த்துக்கேயரால் செயற்படுத்தப்பட்டது.

போர்த்துக்கேயருக்குப்பின் இலங்கையை ஆட்சிசெய்த ஒல்லாந்தரும் இம் முறையையே நடைமுறைப்படுத்தினர். அதன்பின் ஆட்சி செய்த ஆங்கிலேயரும் ஆரம்பத்தில் இம் முறையையே நடைமுறைப்படுத்தியது குறிப்பிடத்தக்கதாகும். இந் நிர்வாக முறைமையில் பிரதேசத்திற்கு பிரதேசம் சிறிது வித்தியாசம் காணப்பட்டாலும் நாடு முழுவதும் இம் முறைமை பெருமளவு ஒத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந் நிர்வாக அலகுகளில், பெரிய அலகுகள் திசாவனி, பலாத்த எனவும் நடுதர அலகுகள் கோறளை, ஹத்பத்து, பற்று எனவும் அழைக்கப்பட்டன. சிறிய நிர்வாக அலகு கிராமமாக இருந்தது. நுவரகலாவிய, கலகம் பளாத்த, ஹறுலு பளாத்த, தம்பன்கடவை போன்றன பெரிய நிர்வாக அலகுகளை சுட்டி நிற்கின்றன. தம்பதெனிய, ஹத்பத்து, வெயூட ஹத்பத்து, தெமில ஹத்பத்து, சியான கோறளை, சல்பிட்டி கோறளை, கொட்டியார்பற்று, தம்பலகாமம்பற்று, கட்டுக்குளம்பற்று, கரவாகுபற்று, வெவகம்பற்று போன்ற பிரிவுகள் இரண்டாம் நிலை பொது நிர்வாகப் பிரிவுகளாக இருந்தன. மூன்றாம் நிலைப் பிரிவுகள் கிராமப் பிரிவுகளாக இருந்தன.

வரலாற்றுக் காலத்திலிருந்து நிர்வாகப் பிரிவு எல்லைகளைத் தீர்மானிப்பதில் புவியியல் வரலாற்றுக் காரணிகள் முக்கியம் பெற்றுள்ளன. ஆறுகள், அருவிகள், நீர்நிலைகள், மலைத்தொடர், நீர்ப்பிரிவு மேடு, குன்றுகள், தனிக்கல்லு போன்றவை அன்றும் இன்றும் எல்லைகளாகக் கொள்ளப்படும் வழக்கம் இருந்து வருகின்றது. சிறிய நிர்வாகப் பிரிவுகளின் எல்லைகளை நிர்ணயிப்பதிலும் பௌதீக அடையாளங்கள் செயற்கை அடையாளங்களிலும் பார்க்க கூடுதலாக பயன்படுத்தப்படுகின்றன.

1833 இல் கோல்புறூக்-கமரூன் நிர்வாகச் சீர்திருத்தத்திற்கு முன்பு பல நிர்வாகப் பிரிவுகளிலிருந்தன. யாழ்ப்பாணம், மன்னார், வன்னி, காலி, தங்காலை, மாத்தறை, ஹம்பாந்தோட்டை, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பு, சிலாபம், புத்தளம், கண்டி, யட்டிநுவர, உடுநுவர, ஹாரிஸ்பத்து, தும்பனை, தும்பற, ஹேவாஹெட்ட, கொத்மலை, இஹல புளத்கம மற்றும் வியலுவ என 22 மாவட்டங்கள், நுவரகலாவிய, சப்பிரகமுவ, ஏழு கோறளை, நாலு கோறளை, மூன்று கோறளை, ஊவா, மாத்தளை, உடபளாத்த மற்றும் வலப்பனே என 9 திசாவனிகள், பஹள ஊவா-வெலெஸ்ஸ, தமன்கடுவ, பிந்தென்ன மற்றும் பாத்த புளத்கம என 4 மாகாணங்கள் இருந்தன. இதைத் தவிர நெடுந்தீவு ஒரு தனித்த அலகாகப் பிரிக்கப்பட்டிருந்து.

இந் நாட்டின் நிர்வாகத்தின் வரலாற்றில் கோல்புறுக்- கமரொன் சீர்திருத்தங்கள் முக்கியமான திருப்புமுனையாயமைந்தன. இச் சீர்திருத்தங்கள் மூலம் முழுநாட்டிற்குமான ஒருங்கிணைக்கப்பட்ட அரசாங்கமொன்று நிறுவப்படுவதற்கு மேற்கூறப்பட்ட 22 மாவட்டங்கள், 9 திசாவனிகள், 4 மாகாணங்கள், ஒரு தீவு (நெடுந்தீவு) என்பன ஐந்து மாகாணங்களாக ஒன்றிணைக்கப்பட்டு 1833 ஒக்ரோபர் 1ஆம் திகதி வர்த்தமானி மூலம் மாகாணங்களின் உள்ளடங்கல் பிரதேசங்களும் எல்லைகளும் பிரகடனப்படுத்தப்பட்டது.

இதன்பின் நாட்டின் நிர்வாகம் மாகாணங்களின் கீழ்கொண்டு வரப்பட்டதோடு ஒவ்வொரு மாகாணத்தின் நிர்வாகமும் ஒவ்வொரு அரசாங்க அதிபரிடம் ஒப்படைக்கப்பட்டது. மாகாண நிர்வாகத்தின் செயற்பாட்டிற்காக ஒவ்வொரு மாகாணத்திலும் கச்சேரி உருவாக்கப்பட்டது.

இவ் ஐந்து மாகாணங்களும் 1833-1889 காலப்பகுதியில் ஒன்பது மாகாணங்களாக்கப்பட்டன. மாகாண எல்லைகளில் காலத்திற்கு காலம் சிறுசிறு மாற்றங்கள் செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கதாகும்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழில் பல...

டுள்ளார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் நீண்டகாலமாகத் தலைமறைவாக இருந்துவந்த நிலையில் நாட்டை விட்டுத் தப்பிச் செல்வதற்கு முயன்ற வேளையே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ம-7,33,104)

## திலீபனுக்கு...

இடம் தாருங்கள் எனக் கோரிக்கை விடுத்து வவுனியா வர்த்தகரான எஸ். சிவரூபன் வவுனியா மாநகர முதல்வரிடம் கடிதம் ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளார்.

நேற்று அவரால் வழங்கப்பட்டுள்ள கடிதத்தில், தமிழர்களுக்காக உன்னத இலட்சியத்திற்காக பல நாட்களாக பசி இருந்து உயிர்நீத்த தியாகி திலீபன் அண்ணாவுக்கு சிலை வைப்பதற்கு வவுனியாவில் இடம் ஒன்றினை ஒதுக்கித் தாருங்கள் என அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடிதத்தினை ஏற்றுக்கொண்ட வவுனியா மாநகர முதல்வர் சு.காண்டீபன், குறித்த சிலையினை வைப்பதற்கு இடம்கோரி தங்களால் தரப்பட்ட இக்கடிதத்தினை மாநகர சபை அமர்வில் முன்வைப்பதாகவும் அத்தோடு இந்தக் கோரிக்கையை விடுக்கும் தாங்கள் வேறு சில நடைமுறைகளும் இருப்பதன் காரணமாக அதனையும் செயற்படுத்தி தமக்கு அந்த ஆவணங்களையும் பெற்றுத் தருமாறும் தெரிவித்திருந்தார். (ம-7,250)

## பாதுகாப்புப்...

ஆளுநர் நா.வேதநாயகனிடம் இலங்கைக்கான அமெரிக்கத் தூதரகத்தின் அரசியல் மற்றும் பொருளாதார விடயங்களுக்குப் பொறுப்பான செயலர் அந்தோனி பெர்னார்ட் கேட்டறிந்து கொண்டார்.

வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை (23.09.2025) அமெரிக்கத் தூதரக அதிகாரிகள் குழுவுக்கும் ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு நடைபெற்றது.

இதில் வடக்கு மாகாணத்தின் நிலைமைகள் தொடர்பில் அறிந்து கொள்வதற்காக வந்துள்ளதாகவும் பல தரப்பினரையும் சந்தித்துள்ளதாகவும் அமெரிக்கத் தூதரகத்தின் செயலர் குறிப்பிட்டார்.

பாதுகாப்புத் தரப்பினர் வசமுள்ள காணிகளின் விடுவிப்புக்கள் அது தொடர்பான முன்னேற்றம் மற்றும் எதிர்கால காணி விடுவிப்புக்கள் உள்ளிட்ட விபரங்கள் தொடர்பில் ஆளுநரிடம், தூதரக அதிகாரி கேட்டறிந்து கொண்டார். மக்களின் காணிகள் மக்களுக்கே என்ற அரசாங்கத்தின் கொள்கை அடிப்படையில் படிப்படியாகக் காணிகள் விடுவிக்கப்பட்டு வருகின்றன என ஆளுநர் சுட்டிக் காட்டினார்.

மேலும் கடந்த காலங்களில் முன்னைய ஆட்சியாளர்களால் மக்களுக்குச் சொந்தமான காணிகள், வயல் நிலங்கள் என்பன வனவளத் திணைக்களம் மற்றும் வன உயிரிகள் திணைக்களம் என்பனவற்றால் வர்த்தமானி மூலம் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளமையை எடுத்துக்கூறிய ஆளுநர் இது திட்டமிட்ட நடவடிக்கை எனவும் குறிப்பிட்டார். தற்போதைய அரசாங்கம் அவற்றை விடுவிப்பதற்காக எடுத்துள்ள முயற்சிகளையும் விபரித்தார்.

கடந்த கால அரசாங்கங்களால் முன்னெடுக்கப்பட்ட பாகுபாடான நடவடிக்கைகளால் ஏற்பட்ட பிரச்சினைகளின் தாக்கம் தற்போதும் எதிரொலிப்பதாகக் குறிப்பிட்ட ஆளுநர் மிகச் சவாலான நிலையிலும் அதனைத் தீர்ப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

மேலும் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள், எதிர்காலத்தில் முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ள நடவடிக்கைகள் தொடர்பிலும் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் கலந்துகொண்டிருந்தார். (ம-

## தமிழ் மக்...

விரைந்து நீதியைப் பெற்றுத் தாருங்கள் என பல கோரிக்கைகளை முன்வைத்து ஐ.நா வதிவிடப் பிரதிநிதியிடம் தமிழ் மக்களின் கையொப்பங்கள் அடங்கிய மகஜர் ஒன்று நேற்று கையளிக்கப்பட்டுள்ளது.

ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி மார்க் அண்ட்ரே பிரான்சேவிடம் அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் ஒன்றிணைந்து கையெழுத்துப் போராட்டத்தில் பெற்றுக் கொண்ட கையொப்பங்கள் நேற்றைய தினம் கையளிக்கப்பட்டன.

இதன்போது தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் ஒன்றிணைந்து கையொப்பமிட்ட கடித வரைவே கையளிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனும் சமத்துவக் கட்சியின் செயலாளர் நாயகம். சந்திரகுமார் கட்சிகளின் ஒருங்கிணைப்பாளரான குருசுவாமி சுரேந்திரனும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

காலம் காலமாகத் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அட்டூழியக் குற்றங்களுக்கான நீதியை விரைந்து நிலை நாட்டவும் பிரதானமாக செம்மணி உட்பட வடக்கு கிழக்கு தாயகத்தில் அடையாளப்படுத்தப்படும் மனிதப்புதைகுழிகளில் தொடர்ந்தும் அகழ்வுப் பணிகளை முன்னெடுக்கவும், கண்டெடுக்கப்படும் ஆதாரங்களை உறுதிப்படுத்தவும் சர்வதேச மேற்பார்வையுடன் கூடிய ஆலோசனை, தொழில்நுட்பம், நிதி, பாதுகாப்பு என பல கோரிக்கைகள் இக்கடிதத்தில் உள்ளடங்கியிருந்தன.

அவற்றை நேரடியாகவும் ஐ.நா. ஒருங்கிணைப்பாளரிடம் தமிழ் மக்களின் பிரதிநிதிகளால் வலியுறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## மின்...

மாதா கோவில் வீதியில் நேற்று இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த விஷ்ணுராஜ் யதுர்மன் (வயது-21) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார்.

மேற்படி இளைஞன் நேற்றுச் செவ்வாய்க்கிழமை (23) காலை தோய்ந்துவிட்டு வீட்டிலிருந்த மின் அழுத்தி மூலம் ஆடைகளை அயன் பண்ணியபோது மின்சாரம் தாக்கி தூக்கி வீசப்பட்டார்.

உடனடியாகத் தெல்லிப்பழை வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற போது அவர் ஏற்கெனவே உயிரிழந்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இம்மரணம் தொடர்பில் யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆறுமுகம் ஜெயபாலசிங்கம் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60,104)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2025.09.23 — சீட்டிழுப்பு இலக்கம் 5961 — G 1 8 8 8 2 6
அத சம்பத — G 8 8 2 6 — சீட்டிழுப்பு இலக்கம் 536

சுப தவசக் — திகதி 2025.09.23 — சீட்டிழுப்பு இலக்கம் 0077 — துலாம் 07 23 39 47

தன நிதானய — திகதி 2025.09.23 — சீட்டிழுப்பு இலக்கம் 1991 — T 05 27 51 60 T

மெகா பவர் — திகதி 23/09/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2309 — Y 13 13 21 46 71

ஜய — திகதி 2026.09.23 — சீட்டிழுப்பு இலக்கம் 0229 — R 0 3 1 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4203 — சீட்டிழுப்பு திகதி 23.09.2025 — K 10 36 41 70 — K

ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2025.09.23 — சீட்டிழுப்பு இலக்கம் 1270 — சிம்மம் 13 32 48 50 சிம்மம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 23.09.2025 — வெற்றி வாரம் 0669 — E 3 8 6 0 9 1 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.24,879,483.60

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2935 — சீட்டிழுப்பு திகதி 2025.09.23 — தினம் செவ்வாய்க்கிழமை — 33 67 75 80 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,940,327.20

சனிதா — திகதி 23.09.2025 — வெற்றி வாரம் 5096 — 13 34 62 76 A — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,049,415.60

சசிரி — 0776 — சீட்டிழுப்பு திகதி 23.09.2025 — செவ்வாய்க்கிழமை — வெற்றி இலக்கங்கள் 22 44 48 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.2,000,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4647 — சீட்டிழுப்பு திகதி 23.09.2025 — தினம் செவ்வாய்க்கிழமை — 03 04 09 41 விருச்சிகம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,878,005.20

லக்ன — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — B 36 05 23 37 61 — 2111 — 23.09.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.595,758,467.60

அத கோடிபதி ADA KOTIPATHI — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2761 — சீட்டிழுப்பு திகதி 2025.09.23 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,810,545.60 — 05 11 12 49 N

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழரின்...

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவிற்கும் இடையில் நேற்றுக் கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகர் காரியாலயத்தில் சந்திப்பு இடம்பெற்றது.

இச்சந்திப்பில், ஜனாதிபதியின் பதவிக் காலத்தில் ஒருவருடம் நிறைவடைந்துள்ள நிலையில் தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளுக்கு எவ்விதத் தீர்வும் கிடைக்கவில்லை.

தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அடிப்படை பிரச்சினைக்கு நிலையான தீர்வு வழங்குவதற்கு அரசாங்கம் ஆரம்ப கட்ட நடவடிக்கைகளை கூட மேற்கொள்ளவில்லை. காணி விடுவிப்பு பிரச்சினைக்குத் தீர்வு வழங்குவதாக அரசாங்கம் குறிப்பிட்டது. ஆனால் இதுவரையில் அந்த வாக்குறுதிகளும் நிறைவேற்றப்படவில்லை என இந்திய உயர்ஸ்தானிகரிடம் தமிழரசுக்கட்சி எம்.பிக்கள் சுட்டிக் காட்டியிருந்தனர். மேலும்,

இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் உள்ள காணிகளை விடுவிப்பதாக வாயால் குறிப்பிடப்படுகிறது. ஆனால் செயலில் ஒன்றுமில்லை. வனவளத் துறை திணைக்களத்தின் கட்டுப்பாட்டிலுள்ள பொதுமக்களின் காணிகளை விடுவிப்பதாக சுற்றாடல் துறை அமைச்சர் வடக்குக்கு வந்து குறிப்பிட்டார்.

மூன்று மாதங்கள் கடந்தும் ஏதும் நடக்கவில்லை எனச் சுட்டிக்காட்டியிருந்தனர். (ம-7,299)


FIAT LUX

**யா/ஹாட்லிக் கல்லூரி பருத்தித்துறை**

**தரம் 6 அனுமதி - 2026**

ஹாட்லிக் கல்லூரியின் தரம் 6 (2026) வகுப்புகளுக்கு புதிய மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் நிகழ்நிலையில் மட்டும் கோரப்பட்டுள்ளன.

"Google Form" வடிவிலான நிகழ்நிலை விண்ணப்பத்திற்குரிய இணைப்பினை கல்லூரியின் இணையத்தளமான www.hartley.lk இலிருந்து தரவிறக்கம் செய்வதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்பிப்பதற்கான இறுதித் திகதி: 2025.10.15

(C-3944) அதிபர்

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-3947)

**076 825 7716 (ஆகாஸ்)**

**பட்டா சாரதி தேவை (Batta Driver)**

♦ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

♦ யாழ். நகரிலிருந்து **7 Km** தொலைவிற்குள் இருத்தல் வேண்டும். (5489)

**076 731 5464, 077 829 0351**

உள்நாடு, வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் சேவை

16 kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு

UK - 1250/=
Australia - 2050/=
France - 1930/=
Canada - 2470/=
Germany - 1930/=

தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்

திருமுருகன் கொம் நெற்

321, K.K.S Road, Jaffna. 0777 554 528

கிளைகள் : கொழும்பு, வவுனியா, மன்னார்,முல்லைத்தீவு, மல்லாவி (5500)

**மணமகள் தேவை**

யாழ்ப்பாணம், இந்து, கௌரவகுடும்பம், பிறந்த ஆண்டு 1990, திருவோணம் நட்சத்திரம், 8 இல் செவ்வாய் உள்ளது. மொத்த கிரகபாவம் 27 ½

IT நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. தாரகர் தேவையில்லை. (1578)

**தொடர்பு: 074 141 1334**

**உடனடி வேலைவாய்ப்பு**

நிர்வாக உத்தியோகத்தர்



விமான பயணச்சீட்டுக்கள் | விரைவு பொதிகள் சேவைகள் | விசா சேவைகள்

40 வயதிற்குட்பட்டோர் விண்ணப்பிக்கலாம் (ஆண்கள் விரும்பத்தக்கது)

வெளிமாவட்டங்களில வேலை செய்ய விரும்புவோருக்கு முன்னுரிமை வழங்கப்படும் (தங்குமிடம் வழங்கப்படும்)

சம்பளம் 30,000/- 50,000/-

எமது நேரடி கிளைகள்: கொழும்பு, மட்டக்களப்பு, திருகோணமலை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, கொடிகாமம், புத்தூர், சாவகச்சேரி, கோப்பாய், சுன்னாகம், யாழ்ப்பாணம், சங்கானை, பண்டத்தரிப்பு, மானிப்பாய், நெல்லியடி, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை (C-3945)

V2 TRAVELS 076 1410725 076 8226236
v2vacancies@gmail.com

**விற்பனையாளர் தேவை**

எமது ஜவுளி நிறுவனத்துக்கு புடவை வியாபாரம் செய்யக்கூடிய அனுபவம் உள்ள ஆண்/ பெண் தேவை. வியாபாரம் பழக விரும்புவர்கள் விரும்பத்தக்கது. (5499)

**சிவகணேஸன் TEX**

41,பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்


# மரண அறிவித்தல்



மலர்வு 14.06.1979 உதிர்வு 21.09.2025

## திருமதி ஜெயலட்சுமி நந்தகுமார்

சோமசுந்தரம் வீதி ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கெற்பேலி மேற்கு மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயலட்சுமி நந்தகுமார் அவர்கள் கடந்த (21.09.2025) ஞாயிற்றுக்கிழமை அன்று அகால மரண மடைந்தார்.

அன்னார் மகாலிங்கம் - மனோன்மணி தம்பதிகளின் அன்பு மகளும் கணேசலிங்கம் - தவமணி தம்பதிகளின் அன்பு மருமகளும் நந்தகுமார் அவர்களின் பாசமிகு மனைவியும் ஜெயராணி (சுவிஸ்), ஜெயரதி, ஜெயராசன் (சுவிஸ்), ஜெயரஜனி (சுவிஸ்), ஜெயசீலன் (சிலன் பந்தல்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் தங்கா (சுவிஸ்), தர்சா, சந்திரமோகன் (சுவிஸ்), தயாநிதி, குணாநிதி, தேவநிதி, கிருஷ்ணகுமார், சிவநிதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் அக்ஷயா (சுவிஸ்), அஹானா (சுவிஸ்), அக்ஷயன் ஆகியோரின் அன்பு அத்தையும் அன்பினியன் (சுவிஸ்) அவர்களின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.09.2025) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கல்லுண்டாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை. (C-3943)

தகவல் : குடும்பத்தினர்
077 844 5263, 077 188 2070

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபன[illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.09.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.